

# ஞானச்சுடர்

புரட்டாதி

மலர் 2008



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ

# குறள்வழி



**நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி**
**தானல்கா தாகி விடின்**

**பொருள்:** மேகம் கடலிடத்தே நீரை உறிஞ்சி மறுபடியும் அந்நீரை மழையாகப் பெய்யாவிட்டால் கடலிடத்துள்ள செல்வங்களும் குறையும். (17)

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு**

**பொருள்:** மழை பெய்யாதாயின் தேவர்களுக்கு இவ்வுலகத்தில் செய்யப்படும் விழாவும் வழிபாடும் நடக்கமாட்டா. (18)



# நற்சிந்தனை

## வேறு

**சிவத்தியானஞ் செய் செய் செய்**
**சிவமேயாமெனல் மெய் மெய் மெய் /**
**அவனியனைத்தும் பொய் பொய் பொய்**
**அதனையறிந்துநீ உய் உய் உய்**

## ஒற்றுமை யிந்த ஊரிடை ஓங்குக

பண்– கௌசிகம் இராகம்– பைரவி

**திங்கள் தங்கிய சென்னியர் தீமிளிர்**
**அங்கை யாளரெம் ஆருயி ரானவர்**
**எங்கு மானவர் எம்மிடர் தீர்ப்பவர்**
**மங்குல் வாழுமி லங்கைவாழ் வானதே**

**எள்ளும் எண்ணெயும் போலவி சைந்துள்ளான்**
**தெள்ளும் மாமறை தந்த திருவினான்**
**கொள்ளு மன்பருளங் கோயிலாய்க் கொண்டுளன்**
**புள்ளு லாவுமி லங்கையிற் போந்ததே**

**வேத கீதத்தன் விண்ணவர் தம்பிரான்**
**சாதலோடு பிறத்தலுஞ் சார்கிலான்**
**காத லாற்றொழு வார்தங் கருத்துளான்**
**தாது போலுமி லங்கைத் தலைவனே**




வெளியீடு – 2 சுடர் – 129

# 2008 புரட்டாதி
# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| ஜெயமே தருபவன்...... | நீர்வை இரா.சு | 1 - 2 |
| குருபக்தி | சு. இலங்கநாயகம் | 3 - 5 |
| விதியை வென்றிடுவோம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 6 - 10 |
| பெரியபுராணம் | நா. நல்லதம்பி | 11 - 13 |
| திருவுருவ வழிபாட்டின்...... | இ. சாந்தகுமார் | 14 - 16 |
| திருமுறைகளின் பெருமை.. | செல்வி இ. பிறிஷானி | 17 - 20 |
| சைவக்கிரியைகள் | பொன். சுகந்தன் | 21 - 23 |
| இறப்பை எண்ணி... | திருமதி சி. யோகேஸ்வரி | 24 - 25 |
| தவமுனிவனின் தமிழ் மந்திரம் | சிவ மகாலிங்கம் | 26 - 30 |
| இனிய காண்க இதன்.... | முருகவே பரமநாதன் | 31 - 35 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தின்..... | இரா. ஸ்ரீநடராசா | 36 - 38 |
| ஆத்திசூடி | ஒளவையார் | - 39 |
| முதுமை | வாரியார் சுவாமிகள் | 40 - 43 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 44 - 45 |
| திருவொற்றியூர் | வல்வையூர் அப்பாண்ணா | 46 - 48 |


**அன்பளிப்பு:-**

**மலர் ஒன்று 30/= ரூபா**

**வருடச்சந்தா தபால்செலவுடன் 385/= ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்:- 021- 2263406, 060- 2219599**

**FAX: 021- 2263406**

**பதிவு இல. Q.D/60/NEWS/2008**

**அச்சுப்பதிப்பு:- சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.**

# ஞானச்சுடர்
# ஆவணிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

ஆவணிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை நீண்டகாலமாகவே ஆச்சிரமத்துடன் நெருங்கிய தொடர்புடையவரும், யா/ தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தின் ஆசிரியராகவும் கடமையாற்றிவரும் திரு இரா. ஸ்ரீநடராசா அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் வெளியீட்டுரையின்போது செல்வச்சந்நிதி ஆலயச் சிறப்புடன் சேர்ந்தே ஆச்சிரமத்தின் சிறப்புக்களையும், அந்தக் காலந்தொட்டே இருந்து வந்த தொடர்புகளையும் விரிவாக விளக்கிக் கூறினார்கள். அத்துடன் சிறப்பாகவும் நேர்த்தியாகவும் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றிவரும் சமய சமூகப் பணிகளையும், பணிகளின் மேன்மைகளையும் எடுத்துரைத்தார். இவ்வாறான மேன்மைப் பணிகளை சிறப்பாக ஆற்றுவதற்கு அன்னதானக் கந்தனின் அருளோடு கூடிய அருளாட்சி ஆச்சிரமத்தை வழிநடத்துகின்றமை கண்கூடு. அவ்வகையில் பேரவையினால் வெளியிடப்பட்டுவரும் 128ஆவது ஞானச்சுடர் மலரினை வெளியீட்டு வைப்பதில் தான் பெருமையடைவதாகவும் கூறியதோடு, ஆச்சிரமம் ஆற்றும் சகல பணிகளுக்கும் சைவர்களாகிய நாங்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்க வேண்டும் எனவும் வேண்டி தனது உரையினை நிறைவு செய்தார்கள்.

**மதிப்பீட்டுரை:**

சந்நிதியான் ஆச்சிரமப் பேரவையினால் மேற்கொள்ளப்படும் பணிகளின் நிமித்தம் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கும் ஆவணிமாத ஞானச்சுடர் 128ஆவது மலரினை பிரபல எழுத்தாளரும் இளைப்பாறிய பிரதி அதிபருமாகிய திரு க. நடேசு (தெணியான்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது மதிப்புரையில் தான் இந்தச் சமய சமூகக் கொள்கைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை. இருந்தபோதும் இந்தச் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளின் நேர்த்தியினால் கவரப்பட்டு, ஆச்சிரமப் பேரவையினரால் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் சஞ்சிகை ஆரம்பித்த காலம் தொடக்கம் இற்றைவரை வருடாவருடம் ஒருமாத மலரின் மதிப்புரையை நிகழ்த்தி வருகின்றேன் என்றும் இவ் ஞானச்சுடர் மலரை நான் மதிப்பீடு செய்வதில் பெருமையடைகின்றேன் என்றும் கூறினார்.

தொடர்ந்து மாதந்தோறும் வெளிவரும் இம்மலரில் தவறாமல், நற்சிந்தனை, திருக்குறள், சுடர் தரும் தகவல், பொன்மொழிகள் ஆகியவற்றுடன் பலதரப்பட்ட வயதினருக்கும் பயன்படக்கூடிய வகையில் நல்ல சமய சமூகக் கருத்துக்களையும், கொள்கைகளையும் உள்ளடக்கிய கட்டுரைகள், கவிதைகள், சிறு கருத்துக்கள் என்பனவும் தாங்கி வந்துள்ளமையையும் விளக்கிக்கூறி இந் ஞானச்சுடர் மலரினை வாசித்து சகல சைவ மக்களும் மேன்மையடைய வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டு மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

உ

# சுடர் தரும் தகவல்

## கைதடி ஆனந்த நகர்
## அருள்மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம்

எமது வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைவது தெய்வவழிபாடாகும். அவ்வகையான தெய்வவழிபாட்டை மேன்மையடையச் செய்வது குரு வழிபாடாகும். அத்தகைய குருவினது செயற்பாட்டினை நன்குணர்ந்து அவரினது மகத்துவத்தை உலகறியச் செய்வது அவரினால் ஆட்கொள்ளப்பெற்ற சீடர்தம் பணியாகும். அப்பணி மூலம் குருவின் வாழ்விடம் சீடர்தம் செயலாக்கமும், அக்கிராமமும் கிராமத்தை சார்ந்த சமூகமும் மேன்மையுறும்.

இவ்வகையான குரு- சீட சங்கமத்தின்மூலம் சிறப்புப் பெற்ற இடமாகத் திகழ்வது கைதடி ஆனந்தநகர் அருள்மிகு மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயம் ஆகும். குருவருளே திருவருளாய் உறையும் இடம் அவர்தம் சமாதிப் பூசனை வழிபாடுமாகும். இறைவனே குருவாகி ஒவ்வோர் மானிடனையும் ஆட்கொள்ளும் நிலையில் மானிடவடிவு தாங்கி வந்தருள் தந்த குருபரம்பரையில் யோகர் சுவாமி வழிகண்ட கைதடி மார்க்கண்டு சுவாமி முதலாய் தோன்றிய சச்சிதானந்த சுவாமிகள், அவர் வழி செல்லம்மா எனப் போற்றும் ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமம் மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலய வழிபாடாகும்.

அப்பூசைகளின் வரிசையில் சச்சிதானந்த சுவாமிகள் சமாதியான நன்னாளாம் புனர்பூசத்தினத்தில் மாதாந்தம் திருவாசகம் முற்றோதுதல் அடியார்களுக்கு அன்னம் பாலித்தல் சிறப்புற நடைபெறுகின்றன.

மேலும் செல்லம்மா மாதாஜியின் சமாதியாகிய கார்த்திகையில் அபிஷேக ஆராதனையும், மாதாந்த பூரணைத் தினத்தில் காயத்திரி செபம் ஓமமும் நடைபெறுவதுடன் மாதத்து வளர்பிறைத், தேய்பிறை பிரதோஷ காலத்து விஷேட அபிஷேக ஆராதனையும் நடைபெறுகின்றது.

இதனை நோக்குமிடத்து கைதடியே சிவபூமி என்று போற்றும்வகையில் புனிதமும் அருளும் நிறைந்த இடமாய் விளங்கும் திருவூராய் மலர்ந்துள்ளது. இதனையே நாம் எல்லோரும் குருவைப் போற்றிப் பூசனை ஆற்றி வழிபாடு செய்து வருவோமாயின் எல்லோருமே இவ்வையகத்தில் இன்புற்று மேன்மையுறுவோம்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தையொட்டி ஆச்சிரம மண்டபத்தில் 31.08.2008 தொடக்கம் 13.08.2008 சனிக்கிழமை வரை இடம்பெற்ற நிகழ்வுகள்

31-08-2008 ஞாயிற்றுக்கிழமை
**விடயம்:-** "பஜனை" **வழங்கியவர்கள்:-** வடபிராந்திய சாயி சமித்தி அன்பர்கள்

01-09-2008 திங்கட்கிழமை
**சொற்பொழிவு:-** "பேசா அனுபூதி" **வழங்கியவர்:-** திரு ச. லலீசன் B.A. (HONS) M.ED

02-09-2008 செவ்வாய்க்கிழமை
**இசைச்சொற்பொழிவு:-** "அன்றும்... இன்றும்... என்றும்..." (பக்கவாத்திய சகிதம்)
**வழங்கியவர்:-** திரு க. ஆனந்தராசா (அதிபர்) (அன்னைதாசன்)

03-09-2008 புதன்கிழமை
**சொற்பொழிவு:-** "நானும் தானும்" **வழங்கியவர்:-** சைவப்புலவர் இரா. கேதீசன்

04-09-2008 வியாழக்கிழமை
**சொற்பொழிவு:-** "கடம்பனும் இடும்பனும்' **வழங்கியவர்:-** சைவப்புலவர் க. நித்தியதசீதரன்

05-09-2008 வெள்ளிக்கிழமை
**விடயம்:-** "பஜனை" **வழங்கியவர்கள்:-** வல்வை மாரியம்மன் பஜனைக் குழுவினர்

06-09-2008 சனிக்கிழமை
**சொற்பொழிவு:-** "மேதைகள் காட்டிய பாதை'
**வழங்கியவர்:-** சைவப்புலவர் கீழ்க்கரை சி. நவரத்தினம் ஆசிரியர்

07-09-2008 ஞாயிற்றுக்கிழமை
**சொற்பொழிவு:-** "ஸ்கந்தஷ்ய கீர்த்திம்" **வழங்கியவர்:-** சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்

08-09-2008 திங்கட்கிழமை
**சொற்பொழிவு:-** "அருள் தரும் முருகன்"
**வழங்கியவர்:-** சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜாக் குருக்கள் (அதிபர்)

09-09-2008 செவ்வாய்க்கிழமை
**கதாப்பிரசங்கம்:-** "முருகன் அலங்காரம்" (பக்கவாத்திய சகிதம்)
**வழங்கியவர்:-** சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் JP

10-09-2008 புதன்கிழமை
**சொற்பொழிவு:-** "அறம் செய" **வழங்கியவர்:-** திரு ஐ. சண்முகலிங்கம் (இளை. ஆசிரியர்)

11-09-2008 வியாழக்கிழமை
**சொற்பொழிவு:-** "ஆறுதல் தருவான் ஆறுமுகன்"
**வழங்கியவர்:-** திரு க.ப. ஆனந்தநடேசன் (முகாமையாளர் இ. வங்கி)

12-09-2008 வெள்ளிக்கிழமை
**சொற்பொழிவு:-** "மயில் ஏறிய சேவகன்"
**வழங்கியவர்:-** சுவாமி சித்ரூபானந்தா (ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்)

13-09-2008 சனிக்கிழமை
**சொற்பொழிவு:-** "ஆதாரம் இலேன்" **வழங்கியவர்:-** திரு ஆ. சிவநாதன் (அதிபர்)

# புரட்டாதிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**செல்வி சீதா வேலுப்பிள்ளை**
(கனடா)
**Dr. M. யோகேஸ்வரதேவர்**
(நெல்லியடி)
**திரு சீ. முருகவேள்**
(கிராம அலுவலர், இடைக்காடு)
**தலைவர்**
(பல. நோ. கூ. சங்கம், தெல்லிப்பளை)
**திரு க. ஸ்ரீஸ்கந்தராசா**
(பிரதி அதிபர் அச்சுவேலி மத்திய கல்லூரி)
**திரு செல்லையா சிவசம்பு**
(இளை. அதிபர், வளலாய்)
**திரு சி. சிவச்செல்வம்**
(இளை. அதிபர், உடுப்பிட்டி)
**அதிபர்**
(அரசினர் த.க. பாடசாலை, சிறுப்பிட்டி)
**திரு சி. சிவனேசன்**
(ஞானவாசா, தேவாலயவீதி, சங்கானை)
**அதிபர்**
(யா/ கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய்)
**அதிபர்**
(யா/ அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி)
**திரு க. இரத்தினம்**
(இளை. கிராம சேவகர், கரணவாய்)
**திரு சி. வேலாயுதம்**
(இளை. அதிபர் திருத்தணி, கரவெட்டி)
**அதிபர்**
(யா/ உடுப்பிட்டி அ.மி. கல்லூரி)
**அதிபர்**
(யா/ வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை)

**அதிபர்**

( யா/ சிவப்பிரகாச வித்தியாலயம், தும்பளை)

**அதிபர்**

(யா/ கரணவாய் மகா வித்தியாலயம், கரவெட்டி)

**அதிபர்**

(யா/ விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி)

**திரு த. சிவகுருநாதன்**

(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)

**திரு க. குமாரதாசன்**

(பொது சுகாதார பரிசோதகர், பருத்தித்துறை)

**திரு துரையப்பா இராசகுலநாயகம்**

(கைதடி கிழக்கு)

**உரிமையாளர்**

(ரேவதி நகைமாடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)

**திரு சின்னத்தம்பி மகாலிங்கம்**

(இராஜவீதி, நீர்வேலி)

**திரு இ. சுப்பிரமணியம்**

(இளை. கிராம சேவகர், ஏழாலை)

**திரு கா.ஆ. சச்சிதானந்தம்**

(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

**திரு வே. தர்மராஜா**

(இளை. பொது முகாமையாளர், அளவெட்டி)

**திரு காரை எம்.பி. அருளானந்தம்**

(ஆசிரியர் ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

---

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.NO. 021-2263406
060-2219599
FAX.NO. 021-2263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www.sannithiyan.org

உ

# ஜெயமே தருபவன் செந்திலாண்டவன்

**திரு நீர்வை இரா.சு அவர்கள்**

உறுதியான வீடுபேற்றைத் தரும் தலமாக விளங்குவது செந்திற்பதி. அலைவாய் முருகப்பெருமானுக்கு உரிய பழைமை மிகுந்த சிறப்புப் பெருந்தலமாக விளங்குவது செந்திற்பதி. செந்தூர் சந்தணாசலம், கயிலைமலையனை செந்திற்பதி, திருச்சீரலைவாய், வேலை நகர், ஜயந்திபுரி எனப் பல நாமங்கள் கொண்டும் அழைக்கப்படுகின்றது. உலக நலனுக்காகத் தாருகாசுரனையும், பத்மாசுரனையும் சங்கரித்து எழுந்தருளி இருக்கின்ற சிறப்புத்தலம் திருச்செந்தூர் ஆகும். ஆங்கு ஜெயம், ஜெயம் என்கின்ற ஒலி இன்றும் ஒலித்துக்கொண்டு இருப்பதை அவதானிக்கமுடிகின்றது. இதன் காரணத்தினால் ஜெயந்திபுரம் என்றும் அழைக்கப்படுகின்றது. இந்த ஜெயம் என்ற ஒலி சூரனை முருகவேள் சங்கரித்து ஜெயம் பெற்ற நாளில் இருந்து ஒலித்துக்கொண்டு இருக்கின்றதாம். இத்தலத்தில் ஆரம்பிக்கப்படும் எந்தச் செயலுக்கும் ஜெயம் உண்டு.

"வெல்லசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத் தடிந்து
தெல்லர் உயிர் சிந்துந் திருமுகம்"

என்று போற்றப்படும் முகத்தை அங்குதானே பார்க்க முடிகின்றது. ஜெயந்திபுரத்தில் தங்கி அவன் தாள்களில் மலர்களால் அர்ச்சித்தால் உறுதியான வீடு பேற்றை அடையலாம் என்றும், அறிவு இல்லாதவர் ஆயினும் செந்தில் வேலவனை உள்ளத்தில் தியானியாமல் பாவங்களைச் செய்பவராயினும் அத்தலத்தில் அடைக்கலம் புகுந்தோர்க்கு மேலான நிலையை அடையச் செய்பவன் என்ற நம்பிக்கை உள்ளது.

செந்திலாண்டவனைச் சரணடைந்தோர்க்கு வறுமை, கொடியநோய் யாவும் தீர்ந்து நலமாக வாழ்வர். செந்திற்பதியில் உள்ள புண்ணிய கடல் அலைகள் தினமும் முருகனின் திருப்பாதங்களுக்கு முத்தம் தந்துவிட்டுப் பின்னோக்கிச் செல்கின்றன. மற்றைய அலைகள் அவன் பாதம் நண்ண முன்னோக்கிச் செல்கின்றன. இந்தப் போட்டியினால் அலைகள் "ஓம்" என்ற பிரணவத்தை இரவுபகல் பூராவும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

"நண்ணுவார் உறவே எண்ணுவார் இறையே
நான் மறை முடிவின் சொற் பொருளே
மண்ணும் வானகமும் பண்ணும் ஆள் வினைஞா
மட்டிலா நடன எம் பரனே
உண்ணும் வானமுதே கன்னலார் இழுதே
உயர்நிலைச் சீரலை வாயா
தண்ணமார் சரணா உனை மறக்கினும்நா
சாற்றிடும் சரவணபவவே"

என்று தன் நாக்குச் "சரவணபவ" என்னும் நாமத்தை சீரலைவாயிலில் சொல்லிக்கொண்டேயிருக்கும் என்று கூறுகிறார். அப்படிப்பட்ட பெருமை வாய்ந்த

**வெற்றி ஏற்பட்டுவிட்டால் களைப்புத் தோன்றாது.**

கடலலையில் நீராடித் தங்கள் பாவங்களைப் போக்கித் தூயவர்களாகிச் செந்திலாண்டவனைத் தரிசிக்கிறார்கள். இரண்டாயிரம் திரிபுர அந்தணர் முருகனிடம் கடலில் மூழ்குவதற்கு உரிய நாட்களை முன்னோர் கற்பித்துள்ளனர். ஒழுக்கத்துடன் ஏழைகள் நாள்தோறும் நீராட உயரிய ஆகாய கங்கைபோல் ஒரு தீர்த்தத்தைத் தந்தருள வேண்டும் என்று வேண்டினர்.

வேலையிடை மூழ்குதிரை மேலவர் வித்தார்
சீலமுட னேழையர் தினந்தினமும் மூழ்க
லாவிய விண்மா நதியின் வாய்த்ததொரு தீர்த்தம்
மூலமிடை யீறின்முதல் வாலருள்க லென்றார்

உடனே குமரன் மகிழ்வுடன் வெற்றியை உடைய இலை வடிவாய் நீண்ட தனது வேற்படையை எடுத்துத் தெற்கே இருநூறு வில்லிடை அளவு செல்லுமாறு இனிதே ஏவினான். அந்தக் கூரிய வேற்படை நிலத்தில் ஊடுருவிச் சென்று பாதல கங்கைமேல் பாய்ந்து வந்து மீண்டும் குமரன் கையிற் சேர்ந்தது. உடனே ஒரு திருக்குளமும் தோன்றியது.

இத் தலத்தில் தானாகத் தோன்றிய குளத்தில் முருகன் முதன்முதலில் வைதிக முறைப்படி தானே மூழ்கினார். அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் முருகன் மூழ்கியதாலும், முருகனின் ஞானவேல் உண்டாக்கிய சிறப்பாலும் அந்தத் தண்ணீரில் மூழ்குபவரை இந்திர பெருஞ்செல்வ இன்பம் அனுபவிக்கச் செய்வதாலும் "கந்த புட்கரணி" என்று பெயர் பெற்றது.

"முந்துறக் குமரவேண் மூழ்குந் தன்மையால்
அந்தமற் றொளிரும் வேலளித்த பான்மையால்
இந்திரப் பெருலளவின்பத் துய்த்தலாற்
கந்தபுட் கரணியாய்க் கவின் சிறந்தவே"

முருகனைத் தொடர்ந்து திரிசுந்த அந்தணர்களும் அரிய மந்திர நியமப்படி அப்பொய்கையில் நீராடினர். பின்னர் விண், மண், பாதலம் என்னும் மூவுலகில் நின்று நாள்தோறும் மூழ்கலுறும் மகத்தான இத் தீர்த்தம் மங்களகரமானது என்று யாவரும் மகிழ்ந்து போற்றுகின்றனர். அதன் இனிமைக்குக் காரணம் முருகன் கைவேல்தான்.

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்த வேல் உண்டே துணை"

என்று நக்கீரர் வேலின் மகிமையைப் பாடியுள்ளார்.

தமிழகம் முழுவதும் வரட்சி நிலவிய நேரத்திலும் கூட இந்தத் தாழிக் கிணற்றில் வரட்சி ஏற்பட்டதே இல்லை. முருகன் அருள்போல் தொடர்ந்து அது ஊறிக்கொண்டேதான் இருக்கின்றது. இக்கிணற்றின் சில அடி தூரத்தில் உப்புக்கரிக்கும் கடல்நீர் இருந்தும் இந்தத் தாழிக்கிணற்றில் ஊறும் நீர் இனிமை நிறைந்தே காணப்படுவது பெரும் சிறப்பாகும்.

இவ்வாறு ஜெய ஒலி கேட்கும் பிரணவம் ஒலிக்கும் கடலில் மூழ்கியும், முருகவேலால் தோன்றிய தாழியில் நீராடியும் செந்திலாண்டவனைத் தரிசித்து எல்லா நலன்களையும் பெறுவோமாக.

**கெட்ட எண்ணம் மறையவேண்டுமானால் நல்ல எண்ணம் உள்ளத்தில் புகவேண்டும்.**

உ

# குருபக்தி

**திரு சு. இலங்கநாயகம் அவர்கள்**

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற ஒழுங்குமுறையை ஆன்றோர் வகுத்துள் ளனர். காரணம் ஒரு பிள்ளை பிறந்து முதன்முதல் தன் தாயைக் காண்கின்றது. தாய் பிள்ளையின் தந்தை இவர் என்பதை அறிமுகப்படுத்துகிறாள். அடுத்து தந்தை தம் பிள்ளையை கல்வி கற்கும் பொருட்டு குருவிடம் சேர்க்கின்றார். குரு பிள்ளைக்கு எழுத்து அறிவிப்பது மாத்திரம் அல்ல ஒழுக்கம் உள்ளவனாகவும், ஞானம் உள்ளவனாகவும் ஆக்கித் தெய்வத்தை அடையும் வழியைக் காட்டுகிறார்.

குரு, ஆசிரியர் ஆகிய இரு பதங் களுக்கிடையே வேறுபாடு உள்ளது. ஆசிரியர் என்ற சொல் ஆசார்யர் என்ற சொல்லை ஒட்டி வந்தது. ஆசார்யர் என்ற சொல்லில் ஆசரணம், ஆசாரம், சர என்ற சொற்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. சர என்றால் நடப்பது, அதாவது இங்கு ஒரு குறிப்பிட்ட ஒழுங்குமுறைப்படி ஒழுகுவது என்பதாகும். அதாவது தர்ம சாஸ் திரங்களில் விதிக்கப்பட்ட விதிமுறை களுக்கு ஏற்ப ஒழுகுவதாகும். அகிம்சை, சத்தியம் முதலியன பேணப்படுகின்றது. எவன் ஒருவன் தர்ம சாஸ்திரங்களின் அர்த் தங்களை ஆராய்ந்து அதைப் போதித்து, மற்றவர்களையும் அந்தச் சாத்திர விதிப் பிரகாரம் நடக்கும்படி செய்து, தானும் அந்த வழிப்படி நடந்து கொள்பவன் "ஆசார்யன்" ஆவான். எனவே ஒரு ஆசிரியனும் தான் நன்றாகக் கற்றவற்றை மாணவர்களுக்குக் கற்பிப்பது மாத்திரம் அல்ல தர்ம சாஸ்திரங்களில் குறித்தபடி நல்ல பழக்க வழக்க ஒழுக்கங்களைத் தானும் பேணிப்பாதுகாத்து மாணவர்களை அவ்வழி ஒழுகும்படி வழிநடத்துபவன் ஆசிரியன் ஆவான்.

ஆனால் குரு என்னும்போது அவர் பெருமை உடையவர், கனவான், மஹிமை உடையவர் என்று அர்த்தம். அதாவது, குரு அறிவாலோ, அனுபவத்தாலோ, அரு ளாலோ பெருமை பெற்றவர், மேம்பட்டவர் என்று அர்த்தம். ஆசிரியர் வெளியிலே படிப்பில் பெரியவர், போதனை பண்ணு வதில் வீரர், நடத்தையால் வழிகாட்டுவதில் சிறந்தவர். ஆனால் குரு என்பவர் உள்முக மாகவே மிகவும் மேன்மையுடையவராய் இருப்பர். குரு மௌனமாகவும் இருப்பார். அவர் தன்னில் தானாக நிறைந்து அனுக்கிரக சக்தி உடையவராக இருப்பர். எவன் ஒருவன் தன்னைச் சிஷ்யனாக நினைந்து அவரிடம் எதை நாடிச் செல் கிறாரோ அது அவருக்குச் சித்தித்து விடும். தட்சிணாமூர்த்தியே ஆதி குரு. இவர் மௌனமாக இருந்து தன்னை அடைந்தவர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கிறார். சந்தான குரவர்கள் நால் வருக்கும் மௌனமாகச் சின்முத்திரை காட்டி ஞானத்தை விளக்கினார்.

இறைவனை யாரும் பார்த்த தில்லை. இறைவனே குருவாகக் காட்சி தருகிறார். "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்கிறார் அருணகிரியார். பிரத்தி யட்சமாக நாம் பார்க்கக்கூடிய ஒரு மனிதர் எப்போதும் சுத்தமாய், ஞானம் உடைய வராய், அசையாத சித்தம் உள்ளவராய்,

அப்பழுக்கில்லாமல் நமக்குக் கிடைத்துவிட்டால் ஈஸ்வர பக்தியால் கிடைக்கும் மனச்சாந்தி இவரிடம் பக்தி செலுத்தினாலே கிடைத்து விடுகிறது.

"குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு
குருர் தேவோ மஹேச்வர

என்ற சுலோகத்தில் குருவுக்கும் தேவனுக்கும் வேறுபாடு இன்மையை விளக்குகிறது. இறைவனுக்கு எப்படியான உத்தம குணங்கள் இருக்கின்றனவோ அவை எல்லாம் இக் குருவிடம் இருக்கின் றன. இவர் சுத்தமானவர், பொய் சொல்லா தவர், வஞ்சனை செய்யாதவர், இந்திரியங் களை வென்றவர், கருணை நிறைந்தவர், மகாஞானி. எனவே குருவின் திருவடி களைப் பக்தி செய்து பற்றிக்கொண்டால், இறை பக்தியினால் நமக்குக் கிடைக்கும் அனுகூலம் அத்தனையும் இவர்மூலம் சுலபமாகக் கிடைத்துவிடும்.

ஆனால், நாம் தெய்வ பக்தியை மறக்கக்கூடாது. இந்தக் குருவை எம்மோடு சேர்த்து வைப்பது இறைவனது சித்தமாகும். தெய்வ அனுக்கிரகத்தால் நமக்கு மூன்று பெரிய வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

1. கிடைத்தற்கு அரிய மனிதப்பிறவி
2. சத்திய தத்துவத்தை தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசை பிறப்பது.
3. மகா புருஷனான ஒரு குரு கிடைப்பது.

குருவினுடைய குரு, குருவினு டைய குரு என்று சொல்லிக்கொண்டு போனால் கடைசியில் இறைவன்தான் மூலகுரு. அவனே மௌனகுருவாக இருந்து உபதேசிக்கும் ஆதிகுரு ஆவார்.

குருவேறு இறைவன்வேறு என்று வைத்துக்கொள்ளாமல் இறைவனே குரு வாக வந்துள்ளார் என்ற மனப்பாங்கு வைத்துக்கொள்வோமானால் குருபக்தி, இறைபக்தி என்று இல்லாது குருவே ஈஸ்வரன் என்று கருதி அந்தக் குருவான இறைவனிடத்து பூரண சரணாகதி அடைந்துவிடலாம். குரு ப்ரம சுத்தமான வராக உத்தமமானவராக இல்லாவிட் டாலும்கூட இவர் மூலமாக நாம் உத்த மமான இறைவனைப் பக்திபண்ணுவதால் அந்த இறைவனே இவர்மூலமாக நமக்கு அனுக்கிரகம் செய்துவிடுவான். குருவை விடச் சிறந்தவர் இல்லை. அவரிடம் பூரண நம்பிக்கை ஏற்படவேண்டும். ஈஸ்வரனே இப்படிக் குருவாக வந்திருக்கிறான் என்ற நம்பிக்கை வந்துவிட்டால் போதும். இந்த நம்பிக்கையும், பக்தியும் நம்மைக் கடைத் தேறச் செய்துவிடும்.

நாம் சிவத்துரோகம் செய்தால்கூட ஈஸ்வரனிடத்து மன்னிப்புக் கேட்கவேண் டும் என்றில்லை. குரு மன்னித்துவிட்டாலே போதும். ஈஸ்வரனுடைய கோபம் தணிந்து விடும். ஆனால், குருவினிடத்து நாம் அபசாரம் பண்ணிவிட்டு, ஈஸ்வரனிடத்து மன்னிப்புக் கேட்டாலும், மன்னிப்புக் கிடை யாது. எனவே குருவினிடத்தே சென்று எமது அபசாரத்துக்கு நிவிர்த்தி தேடிக் கொள்ள வேண்டும். சிஷ்யனுக்காக குருவே சிவனிடம் சிபார்சு செய்தால் அவருக்குக் கோபம் போய் அனுக்கிரகம் செய்வார். ஆனால் குருவுக்கு கோபம் வந்தால் அதை மன்னிக்க வேறு ஒருவரும்

**உண்மையான மனிதனை அவன் தனித்திருக்கும்போது அறியலாம்.**

கிடையாது. அவர்தான் செய்யவேண்டும். நாம் பக்தி செய்வதால் குருவுக்கோ, இறைவனுக்கோ ஒருவித இலாபமும் இல்லை. நாம் மனஅழுக்கு உடையவராக வும், சஞ்சலம் உடையவர்களாகவும், எமது மனதை ஒரு நிமிடமாவது நிறுத்த முடியாதவர்களாகவும் இருக்கின்றோம். எனவே, எப்போதும் சுத்தமான ஞானம் நிரம்பியவனாக ஆடாமல் அசையாமல் பட்ட கட்டை மாதிரி இருப்பவனை நாம் நினைத்தால், அவனது சலனமற்ற நிலை நமக்கு வரும். மனது நின்றால்த்தான் ஆன்மா பிரகாசிக்கும் மனதை நிறுத்து வதற்கு குருபக்தி, ஈஸ்வரபக்தி வேண்டும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. சாந்தோக் கிய உபநிசத்தில் "ஆசார்யவான் புருஷோவேத"- அதாவது குருவைப்பெற்ற புருஷர்தான் ஞானத்தை அடைகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

குருபக்தி இருந்தால் மனது தானாகச் சாந்தம் அடைகிறது. மகான் களுக்கு முன்னால் நாம் ஒன்றை வாசித் தாலும், அல்லது அவர்கள் சொல்வதைக் கேட்டாலும் அது நமது மனதில் நன்றாகப் பதிகிறது. காரணம் அவர்களது சன்னி தானத்தில் எமது மனது சாந்தத்தோடு இருக்கிறது. வகுப்பறைகளிலும், நூல் நிலையங்களிலும் அப்படி இருப்பதில்லை. அதனால்தான் அங்கு படிப்பதும், கேட் பதும் ஓடிப்போய்விடுகின்றது. மனது குருபக்தியில் நனைந்தால் உடனே பலன் உண்டாகும். எனவேதான் மகான்களிடம் உபதேசம் பெறுதல் சாலச்சிறந்தது என்பர்.

**பரம தயாளா சந்நிதிக்குமரா**

தஞ்ச மென்றுன் பொன்னடி சார்ந்தனம்
சஞ்சலந் தீர்த்திடுவாயே!

வஞ்சனை யின்றி வாழ்ந்திட உன்றன்
உறுதுணை தந்திடுவாயே!

பஞ்சமும் பசியும் வருத்திடா வண்ணம்
பாரினிற் காத்தருள்வாயே!

வெஞ்சமர் மறைந்து அமைதி மலர்ந்திட
விரிசுடர் வேலினாய், கருணை செய்வாயே

பஞ்சின் மெல்லடிப் பாவை குறமகள்
பாகனே பரம தயாளா! - அலை

கொஞ்சிடும் கடல்சூழ் தொண்டைமானாறு
குலவிய சந்நிதிக் குமரவேளே.

*திரு கா. கார்த்திகேசு அவர்கள்*

**வாழ்வதற்குத் தகுதியுள்ள எந்த மனிதனும் மரணத்திற்குப் பயப்படவேண்டியதில்லை.**

உ

# விதியை வென்றிடுவோம்

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

எண்ணற்ற உயிர்கள் பிறவி தோறும் அறியாமையால் விருப்புடனும், வெறுப்புடனும் பல வினைகளைச் செய் கின்றன. அவற்றின் பலன்களை அந்தந்த உயிர்களே அனுபவிக்க வேண்டும். வரும் பிறவிகளில்தான் இன்பமாகவும் துன்ப மாகவும் அந்த அநுபவங்கள் வரும். நம் முடைய வாழ்க்கை முழுக்க முழுக்க ஊழ்வினையின் பயனால் அமைந்தது. இந்த வாழ்க்கையில் எது எது எப்படி நடக்கவேண்டுமோ அது முற்கூட்டியே தீர்மானிக்கப்படுகிறது. அதைத்தான் பிராரப்தம் என்கிறோம். ஒரு காரியத்தில் வெற்றியடைந்தால் நம்முடைய முயற்சி என்கிறோம். தோல்வியடைந்தால் அதற் கான காரணத்தை பிறர்மீது சுமத்து கிறோம். நமக்கு நாமேதான் இன்பமோ, துன்பமோ கொடுக்கிறோம். "தீதும் நன்றும் பிறர் தரவாரா". நாம் பலபிறவிகளிற் செய்த நன்மை, தீமைகளே ஊழாய்த் திரண்டு வந்திருக்கின்றன. நம்முடைய வாழ்க்கையை அவையே நிச்சயித்து நடாத்துகின்றன.

பழங்கணக்குக்களைப் பார்த்து மக்களுக்குப் பிறப்புக்கொடுப்பது பிர மனின்வேலை. அவர் படைப்புத் தொழிலில் கைதேர்ந்தவர். அவர் செய்யும் சிருஷ்டிகள் ஒன்றுபோல் ஒன்று இல்லை. வேறுவேறு வகையானவை. வெவ்வேறு உருவம் கொண்டவை. படைப்புத் தொழிலில் பேத மில்லாத சிருஷ்டியே இல்லை. தவறு செய்தவர்க்குத் தீங்கும் நல்லது செய் தவர்க்கு நன்மையும் தருபவர் பிரமன். அவர் தவறு செய்வதே கிடையாது. பிறப்பு, இறப்பு, திருமணம் எல்லாம் தலை விதிப்படிதான் நிகழும். நாம் நினைத்தபடி பிறக்க இயலாது. இன்ன இடத்தில் வள மான, வசதியான இடத்தில் பிறப்பு நிகழ வேண்டுமென யாராலும் நிர்ணயிக்க முடியாது. "அரிது அரிது மானுடராதல் அரிது. அதிலும் கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது" ஒருதாய் பெற்ற பிள்ளைகளே ஒவ்வொருவிதம். சிலர் நல்ல ஆரோக்கியத்தோடும், அறிவோடும், அழ கோடும் பிறக்கலாம். சிலர் புத்தி குறைந் தவர்களாகவும், நோயுற்றவர்களாகவும், சிலர் ஊனமுற்றும் பிறக்கின்றனர். பிறப்பு நம்கையில் இல்லை. எல்லாம் அவரவர் பூர்வஜென்மப்பலன். பிறப்புமுதல் இறப்பு வரை ஒருசில காலகட்டங்களில் நாம் எண்ணியவை நடந்தாலும், வாழ்க்கை முழுவதும் நாம் எண்ணியபடி நடப் பதில்லை.

திருமணமும் இன்னாருக்கு இன்னாரென்று எழுதிவைத்தானே தேவன் என்றவாறுதான் நடக்கும். சிலருக்கு திருமணமாகாமலே இருக்கும். சிலருக்குப் பெற்றோர் பேசி முடித்துவைப்பர். சிலருக்கு காதல் திருமணம் நடக்கும். காதல் என்பது ஊழ்வினையினாலே உண்டாகும் விதியின் விளையாட்டே. முன்வினைப் பலனால் இரு வரும் சந்தித்து விதியின் விளையாட் டினால் இருவரும் இணைந்து வாழ்வார்கள் என்பது தெய்வ சங்கற்பம். நடைபெற்ற திருமணங்களும் சில தோல்வியில் முடிகின்றன. சிலர் சகல செல்வங்களும்

எப்பொழுதும் அவசரம் அதிகமானால் வேகம் குறையும்.

பெற்று ஆனந்தமாக வாழ்வர். சிலர் வறுமையிலும், துன்பத்திலும் வாடுவர். எல்லாம் விதி.

மரணமும் எல்லோருக்கும் ஒரே மாதிரி நிகழ்வதில்லை. கருவிலே, குழந்தையிலே, இளமைப்பருவத்திலே, வயோதிபத்திலே என்று எந்தநேரத்திலும், எந்த ரூபத்திலும் மரணம் வரலாம். ஐந்து நிமிடத்திற்குமுன் கண்டேனே நன்றாகக் கதைத்தாரே. எப்படி இறந்தார்? என ஆச்சரியப்படும்படி சாக்காடு வரும். சிலர் படுக்கையில் கிடந்து அவஸ்தைப்பட்டு எப்போது சீவன் போகுமென அவஸ்தைப் படும்படியாக இறப்பர். சிலர் அகால மரண மும், சிலர் தற்கொலை மரணமும் அடை கிறார்கள். ஏன் இப்படியெல்லாம் நிகழ் கிறது. விதி கொடியது. வலியது. அவரவர் செய்த கன்மவினைப்பலன், ஊழ்வினை அதுதான் தலைவிதி.

சீதைபிறந்ததும் இலங்கை அழிந்ததும்
தெய்வேந்திரன் கண்கள் ஆயிரமானதும்
ஆரைவிட்டது காண் தலைவிதி
எவரை விட்டது காண் விதிவசம்

விதி என்றால் என்ன? நல்வினை, தீவினை என இரு வினைப்பயன், செய்தவினையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி. ஊழ், விதி, நியதி என்பன ஒருபொருட் சொற்கள். ஊழாவது முன்பு செய்தவினை பின்பு விழையும்முறை. தலைவிதி, தலை எழுத்து என்கிறோம்.

நாடெலாம் செந்நெல் விளையினும் நாட்டின் நதியெலாம்
நவமணிதரினும்
காடெலாம் ஆடைகாய்க்கினும் கனகமே பொழியினும் மடவாய்
ஆடலம் புரியும் அம்பலவாணன் அவரவர்க்கமைத்ததேயல்லால்
வீடெலாம் கிடந்து புரண்டு உருண்டு அழினும் விதியலால்
வேறுமொன்றுமுளதோ.

எவ்வளவுதான் அஷ்ட ஐஸ்வர்யங்கள் இருந்தாலும் ஆடலம் புரியும் அம்பலவாணன் அவரவர்க்கு அளந்ததுதான் அளவு. என்னதான் கிடந்து அழுது புரண்டாலும் விதியைவிட வலியது ஒன்றுமில்லை.

“ஊழிற் பெருவலியாவுல மற்றொன்று
சூழினும் தான் முந்துரும்” என்பது பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர் வாக்கு.

கந்தபுராணம், இராமாயணம், மகா பாரதம், சிலப்பதிகாரம் மற்றும் புராணங் கள், பல நூல்களிலும் விதியின் வலி மையை, விதியின் கொடுமையை, விதி யின் விளையாட்டை நாம் உணரலாம்.

காவியத்தலைவன், சக்கரவர்த் தித்திருமகன், ஸ்ரீராமனுடைய முடிசூட்டு விழா நின்றுவிடுகிறது. கோசலை அழுது புலம்புகிறாள். இலட்சுமணன் கோபத்தால் கொதிக்கிறான். மனித ஆன்ம ஈடேற்றத் திற்கு வெற்றியைக் காட்டிலும் தோல்வி யும், வாழ்வைக் காட்டிலும் தாழ்வும்

பேருதவி புரிகின்றன என்பதை உணர்ந் தவன் இராமன். என்னோடு எவ்வளவு அன் பாக இருந்த கைகேயி 'காட்டுக்குப்போ' என்று சொல்கிறாள் என்றால் அது அவளாகச் சொன்னது அன்று. என்னு டைய விதி அவளை அப்படிச் சொல்ல வைக்கிறது.

நதியின் பிழை அன்று நறும்புனல் இன்மை அற்றே
பதியின் பிழை அன்று பயந்து நமைப் புரந்தாள்
மதியின் பிழை அன்று மகன் பிழை அன்று மைந்த
விதியின் பிழை நீ இதற்கு என்னை வெகுண்டது என்றான்.

நமது பிதா, அன்னை கைகேயி, தம்பி பரதன் யாருமே நமக்குத் தீங்கு செய்யவில்லை. விதி செய்த பிழை கோபப்படுவதால் ஆவது ஒன்றுமில்லை என இருவரையும் தேற்றி விதி செய்யும் சதியைச் சொல்கிறான் இராமன். இராமர் கானகம் சென்றதால்த்தானே தசரதர் அவர்மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தார் என்றும், குகனின் நட்புக் கிடைத்ததும், பல முனிவர்கள் ஆசிபெற்றதும், சடாயுவுக்கு மோட்சம் கொடுத்ததும், அரக்கர்களை அழித்ததும், சுக்கிரீவனின் நட்புக் கிடைத்ததும், இராவணனை வதைத்ததும், சீதையின் கற்புத்திறன் வெளியானதும், பரதன் எத்தனை உத்த மன் என்பது வெளியானதும் எல்லாம் விதியின் வலிமையே. "விதியின் பிழை நீ இதற்கு என்னை வெகுண்டது?" என்று கூறிய இராமனே சீதையைப் பிரிந்து தெளிவற்ற நிலையில் இருப்பதைப் பார்த் துச் சடாயு நல்லுரை சொல்கிறார்.

அதிசயம் ஒருவரால் அமைக்கல் ஆகுமோ
துதியறு பிறவியின் இன்பதுன்பம் தான்
விதிவயம் என்பதை மேற்கொளாவிடின்
மதிவலியால் விதிவெல்ல வல்லமோ.

விதிக்குக் கட்டுப்படாதவர் யாண் டும் இல்லை. வாழ்க்கையில் வரும் இன்ப துன்பங்கள் விதிக்கு உட்பட்டன. அறிவின் வலிமையால் ஊழை வெல்லுதற்கு வல்லமை உடையோம் அல்லோம் எனத் தேற்றுகிறார் சடாயு.

"இராவணன்மேலது நீறு" எனத் திருஞானசம்பந்தப் பெருமானாலே உயர் வாகப் பாடப்பெற்ற சிவபக்தனான இரா வணன் சீதாதேவியை விரும்பியதாலும், வஞ்சனையால் கவர்ந்துகொண்டுபோய் சிறைவைத்த குற்றத்தினாலும், தம்பி மாராகிய விபீஷணன், கும்பகர்ணனின் அறிவுரைகளைக் கேட்காத படியாலும், இக்கொடுந்தீவினையினால் அவன் பேரரசு அழிகிறது, அவனைச் சார்ந்தோர் அழிகின் றனர், முக்கோடி வாழ்நாள் அழிகிறது, பெருந்தவம் அழிகிறது, பெற்ற வரங்கள் அழிகின்றன. கடைசியில் இராமனின் அம்பி னால் மாண்டது விதி.

நாம் படிக்கும் சரித்திரப் புத்தகங் களைப் போன்றது அல்ல மகாபாரதம். அதிற் காணும் வீரபுருஷர்களுக்கு வியாச பகவான் அதி மானுஷ்ய இலட்சணங்கள் தந்து இது சரித்திரமல்ல நீதிக்கதை என்று தெளிவாகச் செய்துள்ளார். அவர்களை

வைத்துக்கொண்டு தர்மத்தைப் போதிக் கவே மகாபாரதம் எழுதப்பட்டிருக்கிறது. துரியோதனன் செய்த அநீதிகள் எல்லாம் கௌரவர்களின் அழிவுக்குக் காரணமாய் விதிப்பலனாய் வந்து அமைந்தது. நீதிநெறி வழுவாத பாண்டவர்கள் பாரதப்போரிலே கிருஷ்ண பரமாத்மாவின் துணையோடு வெற்றியீட்டினார்கள். குருஷேத்திரத்திலே ஐந்தாம் வேதமாகிய பகவத்கீதையெனும் பொக்கிஷத்தைக் கண்ணபிரான் நமக்கு அருளினார்.

காவிரிப் பூம்பட்டினத்திலே சிறப் பாக வாழ்ந்த கோவலன், கண்ணகி வாழ்க்கையிலே விதி விளையாடியதைச் சிலப்பதிகாரத்திலே காண்கிறோம். கோவ லன் ஊழ்வினையினால் மாண்டு விடு கிறான். கற்பின் செல்வியாகிய கண்ணகி கதையிலே மூன்று பெரிய உண்மைகளை இளங்கோ அடிகள் சொல்கிறார்.

அரசியல் பிழைத்தார்க்கு அறம் கூற்று ஆவதூஉம்
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்தூட்டும் என்பதூஉம்"
நெறிமுறை தவறிய அரசர்க்கு, அறமே யமனாகும் என்பதும்,

மாசில்லாக் கற்புடைய மாதரை மண்ணும், விண்ணும் வணங்கும் என்பதும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும் சிலப்பதிகாரம் சொல்லும் உண்மைகள்.

கந்தபுராணத்திலே பெருந்தவம் செய்து பெரும்பேறுபெற்ற சூரன் முதலிய அசுரர்கள் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று தர்மத்தை மறந்து வழி தவறி வாழ்ந்தார்கள். சிங்கமுகன், இரணி யன் சூரனுக்கு அறிவுரை சொல்கிறார்கள். சூரனுடைய பாழும் விதிவிடவில்லை. "விதியை யார் வெல்லும் நீர்மையது" எனச் சிங்கமுகன் சொல்கிறான். விலக் கரும் விதியை யாவர் வெல்ல வல்லவர்? ஆகும் விதியினால் எல்லாம் ஆகும். போகும் விதியினால் எல்லாம் போகும், ஈசன் ஒருவனாலன்றித் தேவராலும் ஊழ் வினையை ஒழிக்க இயலாது. முருகப் பெருமானுடைய திருக்கைவேலால் இவன் இறந்து படுவான். அண்ணன் இறப்பதற்கு முன்னரே நான் இறத்தல் தக்கது என்று சிங்கமுகன் முடிவுசெய்து போரில் எல்லாரும் மடிகிறார்கள்.

அகிம்சாமூர்த்தி அண்ணல் மகாத்மா காந்தி கொல்லப்பட்டது அவரின் தலைவிதி. முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தன் சொந்த நலனையே மறந்து நாட்டின் நலனுக்காக நல்லதையே நினைத்து நல்லதையே செய்து பாடு பட்டவர் முன்வினையினால் சுடப்பட்டார். பாட்டுக்கொரு புலவன், தீர்க்கதரிசி, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கோயில் யானை மிதித்ததனால் இறந்தார். இன்றும் நம் வாழ்க்கையிலும், மக்களின் வாழ்க்கை யிலும் ஊழின் வலிமையை, விதியின் விளையாட்டை நாம் காண்கிறோம். நாம் நினைப்பது எல்லாம் நடப்பதும் இல்லை. நினையாத எத்தனையோ காரியங்கள் நடக்கின்றன. எல்லாம் ஈசன் செயல். தலைவிதியை யாரும் அறியவும் முடி யாது. வெல்லவும் முடியாது. இறைவனை யும் ஞானியரையும் தவிர ஏனையோர்க்கு ஊழ்வினையால் உண்டாகும் விளைவு

நீங்காது. ஒருவர் இறந்துவிட்டால் அவர் விதி முடிந்துவிட்டது என்கிறோம். அவர் தலையெழுத்து அப்படி என்கிறோம். விதி என்றால் என்ன? இந்த விதிக்குக் காரணம் என்ன? விதியை வெல்லும் சக்தி மனிதனுக்குண்டா? பிறக்கும்போது பிரமன் நம் தலையில் எழுதியதை நாம் மாற்ற முடியுமா?

பிறவிகள்தோறும் மனத்தாலும், வாக்காலும், காயத்தாலும் புரிந்த வினைகள் மலைபோற் குவிந்துள்ளன. அவ் வினைகளை அழிக்கவல்லது வேற்படை. யொன்றேயாகும். வினைகழிய வேற்படை தாங்கிய விமலனை வழிபட வேண்டும். இறைவன் கருணாமூர்த்தி. நம் இடர் களெல்லாம் அறிந்தவன். உயிர்கள் மலமாயாகன்மங்களின் நீக்கம் கருதி வினைகளைத் துய்க்கும் பொருட்டுப், பக்குவ காலம் வரும்வரை காத்திருப்பான். நாம் இப்படி மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து மாளாத பிறவியை அறுத்திடவும் எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாகிய விக்னவிநாயகனைத் துதிப்பதால் பிறவி நீங்கும் என்கிறார் ஔவையார். "விநாயகனே வல்வினையை வேரறுக்க வல்லான்" லலிதா ஸகஸ்ர நாமத்திலே அம்பிகையே பிறப்பறுப்பவள், பிறவி எனும் காட்டுத் தீயை அணைக்கும் அருள்மழை என்றெல்லாம் சொல்லப்பட்டுள்ளது. நாம் நமது இஷ்ட தெய்வத்தைச் சரணடைந்து நம்பிக்கையோடு வழிபட்டு வினைகளை வேரறுத்து விதியை வென்றிடலாம்.

(தொடரும்...

## அருளமுதம் சுரந்திடும் வேலவா!

ஆறுதல் தந்திடு ஆனைமுக சகோதரா
ஆற்றுடன் கூடிய அடியாரை அணைத்தே
ஆறாப்பிணியாவும் தீர்த்ததே தீர்த்திடுவேலா
ஆலிலையில் அருளமுதாய் வீற்றிடு வேலவா!

ஆதரிப்பார் யாரென்றிடும் அடியாரிடத்து
ஆதுலர்சாலையாய் யாமிருக்கப் பயமேது கூறும்
ஆற்றங்கரை வேலவன் அருள்நிதியம் தந்திடவே
ஆச்சிரமத்தே அருளமுதம் சுரந்திடு வேலவா!

ஆறுபோல் அலைமோதும் அடியார்க்கும்
ஆறுதல் தந்தும், தர்மசிந்தனை யோடுவாழ்வின்
ஆறாப் பசிப்பிணிநித்தம் போக்கி, ஊனத்துநோய்
ஆற்றிடு மருத்துவச் சாலையாய் வாழ் ஆச்சிரமமே வாழி!

*-சைவப்புலவர் க. நித்தியதசீதரன் அவர்கள்-*

மனித உள்ளத்தில் அன்புக்கு அடுத்தபடியான தெய்வீக உணர்ச்சி அனுதாபம்தான்.

உ

# பெரியபுராணம்

திரு நா. நல்லதம்பி அவர்கள்

பஞ்சபுராணம் எனப்பெறுகின்ற தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பன சைவமக்களுக்கு அத்தியாவசியமாயுள் ளன.

இவற்றுள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகிய நான்கும் பதி, பசு, பாச இலக்கணத்தை விளக்குவன; தோத்திர வடிவில் இருப்பன.

பெரியபுராணம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங் களையும் அனுட்டித்து முத்திபெற்ற மெய்யடியாருடைய அடிமைத்திறத்தை விளக்கி வரலாற்று வடிவில் இருப்பது.

இவ்வைந்தும், சைவசமயத்துக் கும், சிவாலய நித்திய நைமித்திய தேவை களுக்கும், சிவபூசைக்கும், சிவதரிசனத் துக்கும் மாகேசுர பூசைக்கும் இன்றியமை யாப் பெருஞ்சிறப்பினை உடையன.

பெரியபுராணம் ஒரு சிவபுராணம் ஆகும். இதிலே 'பெரிய' என்ற அடை மொழி செயற்கருஞ் செயல்களைச் செய்த "பெரியாரை" குறிப்பதாக அமைகிறது. "செயற்கரிய செய்வார் பெரியர்..." என்று தெய்வப்புலவர் கூறுவது கவனிக்கத் தக்கது. "தெய்வ மாக்கதை" எனக்கூறும் போது "மா" என்னும் ஓரெழுத்துச் சொல் 'பெரிய' என்னும் பொருளில் வருவதுங் காண்க. எனவே பெரியகதை, பெரிய புராணம் என வழங்கப்பெறுகின்றது. சேக் கிழார் இதனைத் திருத்தொண்டர் புராணம் என்றே பாடியுள்ளார். 12ஆம் திரு முறையாகக் கூறப்பெற்றுள்ள இப்புராணம் ஏனைய புராணங்களைப் பார்க்கிலும் மேன்மையானது என்னும் பொருளில் 'பெரியபுராணம்' என்றும் கொள்ளப் பெற்றிருக்கலாம்.

இனி தனியடியார் 63பேரும் தொகையடியார் 9பேருமாகத் திருத் தொண்டர் 72பேருடைய சரித்திரங்கள் இருக்கவும் "அறுபத்துமூவர் புராணம்" எனப் பெரியபுராணம் கொள்ளப்பெறுதலும் காணலாம். "அப்பாலும் அடிச்சார்ந்த அடி யார்க்கும் அடியேன்" என்றதனால் இனி மேல் வரப்போகும் அடியவர்களைப் புகழ்ந்தமை சிறப்பானது. பெரியபுராண காலம் கி.பி 11ஆம் நூற்றாண்டு ஆகும். ஆயின், பெரியபுராணம் பாடிய சேக்கிழார் வாழ்ந்த காலம் 12ஆம் நூற்றாண்டு ஆகும். திருத்தொண்டத் தொகையைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடிய காலத்துக்குப் பின்னரே திருவாதவூரடிகள் என்கின்ற மாணிக்கவாசக சுவாமிகள் வாழ்ந்திருக்க வேண்டும். அதனாலேயே பெரியபுராணத் தில் மாணிக்கவாசகர் (நாயன்மார் நால் வரில் ஒருவர்) புராணம் இடம்பெறவில்லை.

ஆயினும் பஞ்சபுராணத்தில் திரு வாசகம் இரண்டாமிடம் பெற்றிருப்பதும் நோக்கத்தக்கது.

12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அநபாயசோழன், சீவகசிந்தாமணி என்ற காதல் இலக்கியத்தில் பித்துக்கொண்ட வன். அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பர். அதனால் அவனை நன்நெறியில் செலுத்தச் சேக்கிழார் அவனுக்குத் திருத் தொண்டர் கதைகளைக் கூறிவந்தார்.

**எந்துப் பொருளிலும் எந்த ஆத்மாவிலும் நல்லது கெட்டது கலந்தே இருக்கிறது.**

அதன் பலனாக, மனம்மாறிய அநபாய சோழமன்னனின் வேண்டுகோளின்படி திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் பாடினார்.

இதற்குமுன் கடவுளையன்றி மனிதனை மையமாக வைத்து எந்த ஒரு இலக்கியமும் பாடப்பெறாத நிலையில், இந்த பெரியபுராணத்தைப் பக்திச் சுவையும் இலக்கிய நயமும் பொருந்தப் பாடியிருக்கின்றார் தெய்வச் சேக்கிழார். தில்லை நடராஜப்பெருமான், “உலகெலாம்” என்று அடியெடுத்துக் கொடுக்கப் பெரியபுராணம் பாடப்பெற்றது. இந்த நூலையும் சேக்கிழார் நாயனாரையும் யானைமீது ஏற்றிப் பவனிவரச்செய்து பாராட்டினான் அநபாயமன்னன்.

பக்திக்குச் சிறந்தமொழி தமிழ்மொழி. இந்தவகையில் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பாடிய மீனாட்சி சுந்தரம்பிள்ளை என்ற தமிழ்நாட்டுப்புலவர்,

பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப்
பாடிய கவிவலவ!” என்று சேக்கிழாரைப் புகழ்ந்து பாடியுள்ளதுங் காணலாம்.

பெரியபுராண காப்பியத் தலைவன், திருத்தொண்டத் தொகையைப் பாடியருளிய சுந்தரரே ஆவார். இவருடைய மேன்மை முதல், இடை, கடை ஆகிய மூன்று இடங்களிலும் பேசப்பெறுகின்றது.

சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடிய கதை;

சுந்தரர் தாம் அடியார்க்கடியாராக இருக்க விரும்பியபோது, இறைவன், “தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்” என்று அடியெடுத்துக் கொடுத்துத் திருத்தொண்டத்தொகை சைவ உலகுக்குக் கிடைக்கத் திருவருள் செய்தருளினார் என்பர்.

திருத்தொண்டத் தொகையை முதல்நூலாகவும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலை வழிநூலாகவும் கொண்டு சேக்கிழார் பெரியபுராணத்தைப் பாடினார். சேக்கிழாரின் இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பது.

### *பெரியபுராண மகிமை*

இறைவனுடைய பக்திநெறியில் வழுவாது, வாழ்வாங்கு வாழ்ந்து வரும் அடியார்களினதும் தொண்டர்களினதும் அவர்களின் அடியார்களினதும் அன்பினால் ஈர்க்கப்பெற்ற இறைவன், அவர்களுக்கு அருள்வழங்குந் திறனும் அவர்கள் பெருமையை உலகறியச் செய்யும் பாங்கும் பற்றியே பெரியபுராணம் கூறுகின்றது.

பகைவனுக்கும் அருள்செய்யும் பண்பாடு மெய்ப்பொருள் நாயனார் மூலமும்,

அன்பே சிவம் என்பதைத் திருமூலர் வழியிலும்,

“அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு” என்பதைக் கண்ணப்பர் கதையிலும், பிள்ளையைக் கறியாக்கிய சிறுத்தொண்டர் கதையிலும் காட்டி இறை அன்பை உச்சப்படுத்தும் சேக்கிழார் திறம் போற்றுதற்குரியது.

தன்னையொத்த மனிதனுக்கு அடியாருக்குச் சேவை செய்தல்- மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதைப் பெரியபுராணம் நமக்குப் புகட்டுகின்றது.

அடியார்களுக்கு நினைவாலயம் அமைத்தல், குருபூசை செய்தல்

ஆகியவற்றைப் பெரியபுராணமே கற்பித்தது. சமயம்வேறு வாழ்வுவேறு என்று மாறுபட்ட எண்ணப்பாங்கு கொண்ட பல சமயங்கள் (உதாரணம் சமணம்) நிலவிய அந்தக் காலத்தில் சைவநெறியை வாழ்க்கைநெறியென்று காட்டிப் பெருமை பெற்றது பெரியபுராணம்.

இலக்கியமாகவும் வரலாற்று இலக்கியமாகவும் விளங்குவது பெரியபுராணம். சைவசமய வளர்ச்சி, மூவேந்தர் காலச்சிறப்பு, இசை, நடனம், பண்பாடு, சமூகவரலாறு எனப் பல திறப்பட்ட தகவல்களைக் கூறுகின்ற நூலாக விளங்குவது பெரியபுராணம் ஆகும்.

மனிதநேயம், பண்பாடு, உயிர்கள்மேல் இரக்கம், வழிபாடு ஆகிய நான்கும் பெரியபுராணம் முழுவதிலும் காணப்பெறுகின்றது.

மெய்யடியாரது தன்மை எப்படியானது என்பதைக்

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.

என்றும்,

ஆரம் கண்டிகை; ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியலது அன்றிலர்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலர்
வீரம் என்னால் விளம்புந் தகையதோ

என்றுங் கூறுகின்றார் சேக்கிழார்.

மொத்தத்தில் பெரியபுராணம் சைவசமய உண்மைகளையும் அருட்டிறனையும் விளக்கும் ஒப்பற்ற நூலாகத் திகழ்கிறது. உவமை அழகும் காப்பிய அமைப்பும் கற்பனை நயமும் பொருந்தியிருப்பதோடு, ஒரு வரலாற்று நூலாகவும் அது விளங்குகின்றது. சமூகநோக்கில் பார்க்கும்போது, அநீதிகள், சாதிபேதம், பொருளாதார ஏற்றத்தாழ்வு, மேலோர், கீழோர் என்பன கண்டனத்துக்குள்ளாகி இருப்பதையும் காணலாம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்பதை மிகவும் அழகாக, ஆணித்தரமாகப் பெரியபுராணம் கூறுகின்றது.

## உத்தமன் யார்?

வயதான காலத்தில் தன்னை வைத்துக் காப்பாற்ற மகன் இல்லையே என ஏங்குபவன் அதமன், தான் இறந்த பிறகு தனக்குக் கருமம் செய்ய மகன் இல்லையே என ஏங்குபவன் மத்திபன், தான் இறந்த பிறகு தான் செய்த தருமங்களைத் தொடர்ந்து செய்ய மகன் இல்லையே என்று ஏங்குபவன் உத்தமன்.

-வாரியார் சுவாமிகள்-

**பிரம்மம் ஒன்றே உண்மையானது என்பதுதான் வேதாந்தத்தின் முடிவு.**

உ

(தொடர்ச்சி...

# திருவுருவ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

திரு இ. சாந்தகுமார் அவர்கள்

சிற்பங்கள் நிறைந்த இடம் ஆலய மாகும். ஆலயத்தில் மேற்கொள்ளப்படும் உருவவழிபாடு இந்து சமய மரபில் உயர் தத்துவத்தை உள்ளடக்கியது. உருவ வழிபாடு பற்றிச் சிம்மர் குறிப்பிடும்பொழுது "மனிதனது கற்பனைக்கும் உணர்வுக்கும் இயைபு ஏற்படும் வகையில் வழிபாட்டின் நோக்கத்திற்காக முழுமுதற்பொருளுக்கு உருவம் கற்பிக்கப்படுகின்றதெனவும் மனித உருவேற்றிய பண்பினடிப்படையில் உள்ளத்தில் உயர் தெய்வமாகப் பிரதி நிதித்துவப்படுத்தப்படுகிறது என்ற கருத் தும் இங்கு பொருத்தமானது. உருவ வழிபாட்டின் தெய்வீகநோக்கம் கருதி "திரு" என்ற அடைமொழியை உருவம் என்ற சொல்லின்முன் சேர்த்துக்கூறுவது மரபாகும். இவ்வுருவ வழிபாடு பற்றி மறைமலை அடிகள் குறிப்பிடுமிடத்து

''திருவுருவத்தை வழிபடும் போதெல்லாம் கல்லினாலும் செம்பினாலும் அமைக்கப்பட்ட பகுப்பொருள் வடிவான அத்திருவுருவங்கள் அவ்வடையாளங் களையுடைய அறிவுப்பொருள் வடிவான அருட்கோலங்களை நினைவூட்டி அவ் வருட்கோல வழிபாட்டின்கண் அவர் அறிவைப் பதிவுசெய்து மெய்யன்பர்க்கு உறுதிதருதலால் அது திருவுருவ வழிபாடு என வழங்கப்படுகிறது என்று குறிப்பிடுவர். இதுபற்றிக் கைலாசநாதக்குருக்கள் குறிப் பிடுமிடத்து "குணங்குறியற்ற இறை வனைக் குணங்குறிகளால் வகுக்கும் எல்லைக்குள் அகப்படுத்தி புறத்தோற்றங் கொடுத்து எமது கட்புலனுக்குள் அடங் கச் செய்யும் முயற்சியின் விளைவேதாம் வழிபட நிறுவும் விக்கிரகம்" என்பதாகும்.

உருவமற்ற இறைவன் ஆன்மாக் கள் உய்வதற்காகக் கருணைமேலீட்டால் உருவு கொள்கிறான் என்பது சைவ சித்தாந்தக்கொள்கை. தடத்தநிலை/ சொருபநிலை பக்குவமிக்கவர்களுக் குரியது. சிவலிங்கம் இதனைக் கிரகித்து உணரமாட்டாதவர்க்கே கை, கால் முத லிய உறுப்புக்கள் பொருந்திய இதர தோற்றங்கள் துணைபுரிகின்றன. ஒரு வரலாற்றைக் காட்டும் முறையில் உரு வாகும் சிற்பத்தைக் காண்பவன் அகக்கண் கொண்டு அதை உரியவாறு காணும் வேளை அது சுட்டும் உயரிய தத்துவம் உணர்ந்து உயர்ந்த அறிவுநிலை எய்து கின்றான். சிற்பங்களினால் ஒருவனுக்கு ஏற்படும் அனுபவம் இதுவாகும்.

T.M.P. மகாதேவன் குறிப்பிடு கையில் விக்கிரகவழிபாடு இந்து மதத் திற்கு அசாதாரணமன்று எனவும் உல கெங்கும் உள்ள மதவுணர்வு அதன் வளர்ச்சியின் ஒரு நிலையில் அடைந்த செழிப்பில் அறிகுறியே விக்கிரக வழிபாடு எனக்கூறி இந்து ஒருவன் விக்கிரகத்தை வழிபடும்போது அதில் ஒரு கல்லின் படிவத்தையோ அல்லது உலோக கட்டியையோ காண்பதில்லை என்றும் அவன் கண்ணுக்கு அவை இறைவனின்

ஒரு திருவடையாளமாகவே தென்படு கின்றன எனக்குறிப்பிடும் கருத்து ஈண்டு கவனிக்கத்தக்கதாகும். உருவவழிபாடு சமயநிலையில் நின்று ஆன்மீக வளர்ச்சி பெற விரும்புபவர்களுக்கு உறுதிப்பிடியாக இருந்து வந்துள்ளது.

விக்கிரகம் பரம்பொருளைச் சுட்டும் சின்னமாகப் பயன்பட்டுள்ளதோடு பல்வேறுபட்ட உண்மை நுண் பொருட்பரப் பெல்லாம் தன்னகத்தடங்கிக் கொண்டு இறைவனை எளிதாக உணர்ந்து வழிபட வும் உதவியுள்ளது. அவ்வழிபாடு வாயி லாகவே எமது உணர்வை இழுத்துச் சென்று இறைவன் மாட்டுப் பதியவைக்கும் கருவியாகவும் இது விளங்கியுள்ளது. விழுமிய ஒன்றைக் குறிக்கோளாகக் கொண்டு நிகழ்த்தப்படுவது வழிபாடு கடவுளே விழுமியது என்றும் கடவுளினும் விழுமிய தொன்றில்லை என்பர். சமய நெறியாளர் உள்ளம் உருவத்தில் ஒன்றி அதனால் உள்ளுணர்வு எழுதற்கும் வேண்டப்படுவது வழிபாடு. அவ்வழிபாடு சமயப்பொறியில் உருவங்களை நிலைக் களனாகக் கொண்டு திகழ்ந்து வருகின் றது. இந்திய வழிபாடு முறையின் அடித் தளமாகிய விக்கிரக வணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சிற்பமும் ஓவியமும் நுண்ணரும் கலைகளாகப் பரிணமித்தன. இந்திய மக்களின் வாழ்க்கையில் ஆழமாகவே வேரூன்றிய சமயப்பண்பு கலையைப் பொறுத்தவரை பொறிப்படுத்தும் கோட்பாடாகவும் அமைந் தது.

இறைவனைக் கலைவடிவமாகக் காண்பது இந்துசமயப் பண்பாகும். கலைகளைத் தெய்வீகமாய்ப் போற்றுவது அச்சமயத்தின் மரபு. கலையும் சமயமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தே வளர்ச்சி பெற்று வந்துள்ளன. "எல்லாக் கலைகளுக்கும் ஆத்மாவாகவும் உடலாக வும் இருப்பவன் இறைவனே" என்ற அடிப்படை நம்பிக்கை இந்துசமய வாதி களிடையே பண்டுதொட்டு இருந்துவந் துள்ளது. இறைவன்மீது கொண்ட இறை நம்பிக்கை காரணமாகவே மக்கள் அவ னைப் பல்வேறு வடிவங்களில் வழிபட் டனர். இச்சமய நம்பிக்கையே இந்து விக்கிரக வழிபாட்டின் அடித்தளம்.

"அழியாத நம்பிக்கைதான் ஆத் மீக வாழ்க்கைக்கு அடிப்படையானது" என்ற கருத்தை டாக்டர் இராதாகிருஷ்ணன் ஏனைய சமயங்களுடன் தொடர்புபடுத்திக் கூறுவர். அத்தகைய ஆத்மீக நம்பிக்கை யின் சின்னமாகவே விக்கிரகங்கள் கோவில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டன. இந்தியாவில் சிவனோடு தொடர்புடைய விக்கிரகவியல் வரலாறு தனித்துவமுடையது. அதன் தொன் மையை அறிவதற்கும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் இற்றைக்காலம் வரை நிகழ்த்தப்பட்டுள்ள அகல்வாராய்ச்சியும் மானுடவியல் ஆராய்ச்சியும் நன்கு உதவி உள்ளன. இவைதவிர இலக்கியங்கள் வரலாற்றுக் காலங்களில் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்கள் நாணயங்கள் தகுந்த ஆதாரங்களாக விளங்குகின்றன. இதனை நன்கு ஆராய்ந்தவர்களில் "பனர்ஜி" என்பவர் குறிப்பிடத்தக்கவர். இந்து விக்கிரகவியல் வளர்ச்சி இத்துறைபற்றி அறிய நன்கு பயன்படுவதாகும். தென்னிந் தியச் சிற்பங்களைக் காலவரன் முறைப் படி ஆராய்ந்தவர் அறிஞர் "சிவராமமூர்த்தி" ஆவார். தென்னிந்திய உலோகச் சிற்பங் கள் என்ற பெயர் கொண்ட அவரது

**இறைவனை அடைய உள்ளத்தில் ஏக்கமும், துடிப்பும் இருந்தாலே போதும்.**

நூலும் முக்கியத்துவம் உடையது. தேவாரி என்பவரது நூலும் இத்துறை சார்ந்ததே இவரது நூல்கள் கல்வெட்டுக் களிலுள்ள செய்யுட்கள் சித்தரிக்கும் இந்து விக்கிரவியல் பற்றியதாகும்.

உலக நன்மைக்காகவும் யோகிகள், தேவர்கள் ஆகியோர் நன்மைக்காகவும் மேலான ஞானத்தைப் பெறுதற்காகவும் சிற்ப நூல்கள் இயற்றப்பட்டிருப்பதாகவே பண்டைய நூலாசிரியர்கள் தத்தம் நூலில் தொடக்கவுரையில் கூறுகின்றனர். மனிதன் இயற்கையானதும் முதுமையானதுமான வாழ்க்கையை வாழ்ந்து வேண்டிய இன்பத்தையும் அமைதியையும் ஆய்ந்து வாழ்க்கை இலட்சியத்தையும் அடைய உருவ வழிபாடே எளிய சாதனமாக உதவுகின்றது. விக்கிரகவியல் பற்றியும் அதனை உருவாக்கும் சிற்பியின் ஒழுகலாறும், சிற்பத்திற்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பினையும் திருவுருவம் என்பதன் பொருள் என்ன என்றும் திருவுருவத்தின் வகையினையும் அதனால் உருவாக்கப்படுகின்றன என்பதை அறிந்தோம். இனி அதனைக் கால வரையரைப்படுத்தி நோக்கலாம். (தொடரும்....

## வெறும் காலில் நடப்பது நல்லதா?

உணவருந்தும்போதுகூட காலில் செருப்பணிந்திருப்பதை அந்தஸ்தாகக் கருதும் தலைமுறையில் நாம் வாழுகின்றோம்.

மிதியடிகள் மட்டும் பாதரட்சைகளாக இருந்த காலத்திலும் வெறும் காலில் நடப்பவர்களை நன்மையுள்ளவர்களின் கணத்தில் உட்படுத்தியிருந்தனர். ஒருவர் அணிந்திருக்கும் செருப்பின் விலையிலிருந்து அவருடைய சமூகநிலையை மதிப்பது இன்றைய சமூகம். உடற்பயிற்சிக்காக நடக்கும்போதும் இறுக்கிப் பிடிக்கும் 'ஷூஸ்' அணிவது சமூகத்தில் கட்டாயமாகின்றது. "பிறர் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள்" என்ற தாழ்வு மனப்பான்மையே இக்கட்டாயத்தை ஏற்படுத்துகின்றது. வெறும் காலில் நடந்தால் பார்ப்பவர்கள் தங்களை எளியவர்கள் என மதிப்பிடுவார்களே என்ற பிரச்சினை பலரையும் கவலைக்குள்ளாக்குகின்றது.

வெறும் காலில் சிறிது நேரமாவது நடப்பது சரியான முறையிலான இரத்த ஓட்டத்துக்கும் ஆரோக்கியமான வாழ்வுக்கும் இன்றியமையாதது என்று நவீன மருத்துவ இயல் அண்மையில் வெளிப்படுத்தியுள்ளது.

கரடுமுரடான தரையில் நடக்கும்போது பாதத்தின்கீழ்ப் பாகம் நேரடியாக அழுத்தம் ஏற்கின்றது. இது உடற்செயற்பாட்டை ஊக்குவிக்கும் என்பது கண்டறிந்துள்ளனர். பாதத்துக்கு அடியில் விரல்கள்முதல் குதிகால் வரை அமைந்திருக்கும் ஒவ்வொரு பாகங்களும் நரம்புகள், மூளை, இருதயம், சிறுநீரகம் முதலிய எல்லா உறுப்புக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளன. இதனால் ஒவ்வொரு பாகத்திலும் ஏற்படும் அழுத்தம், அதனுடன் தொடர்பு கொண்டுள்ள உறுப்பின் செயலாற்றலை துரிதப்படுத்தும். பாதத்துக்கடியில் ஊசிகள் குத்திச் செய்யும் அக்யுப்பங்சர் என்னும் சீன சிகிச்சையின் மறு உருவமே செருப்பில்லாமல் வெறும் காலில் நடப்பதில் இயற்கை நமக்களிக்கின்றது.

உ

# திருமுறைகளின் பெருமை மற்றும் வகைப்பாடுகள்

செல்வி இ. பிறிஷானி B.A(HONS) Sociology, SP

தமிழில் உள்ள சைவ இலக்கியங்கள் தோத்திரம் (இறைவனை வழிபடுதல்), சாத்திரம் (சைவசமய தத்துவ விளக்கங்கள்) என இருவகைப்படும். தோத்திர நூல்களுக்குத் திருமுறை என்பது பொதுப்பெயராகும்.

முதல் எட்டுத் திருமுறைகளின் ஆசிரியர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர் ஆவர்கள். இவர்களை சைவர்கள் பெரிதும் மதித்துப் போற்றுவதால் இவர்களை "சமயக்குரவர்கள்" என்றழைக்கின்றனர். இவர்கள் நூல்கள் இறைவனைப் போற்றியும், இறைவன் உயிர்களுக்கருளும் பண்பு, உயிர்கள் மேற்கொள்ளவேண்டிய நெறிமுறைகள் பற்றியும் போதிக்கின்றன. இதில் கண்ட பாடல்கள் அனைத்தும் தோத்திரப்பாடலாகும்.

சம்பந்தர் கிரியா நெறியையும், நாவுக்கரசர் தொண்டு நெறியையும், சுந்தரர் தோழமை நெறியையும், மாணிக்கவாசகர் மெய்ந்நெறியையும், பின்பற்றிப் போதித்தார்கள். சைவ ஆகமங்களில் குறிப்பிடப்பட்டுள்ள சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றிற்கு அடிப்படையாக இவை அமைந்துள்ளன. சிவன் இசையின் உயிர். ஆகையால், தேவாரப்பாடல்கள் இசைக்கருவிகளின் துணையோடு பாடப்பட்டன.

நான்மறை வழக்கு தமிழ் நாட்டில் ஆரியர்கள் வருவதற்கு முன்பே உண்டு. அவை அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு பொருள்களுக்கும் நான்காக அமைந்தன என்பதும், அவை தமிழ் மொழியிலேயே ஆக்கப்பட்டு வழக்கில் இருந்தன என்பதும் சரித்திரங்களாலும் இலக்கியங்களாலும் தெரிய வருகிறது. (ஆதாரம்: திருமந்திரம், பன்னிரு திருமுறை, வெளியீடு 17, பக்கம் 20 அடிக்குறிப்பு)

வேதங்களும் ஆகமங்களும் வேறுவேறானவை எனச் சிலர் சொல்வர். ஆனால், தத்துவ தரிசனம் கண்ட பெரியோர்க்கு இவற்றில் மாறுபாடின்மை புரியும். வேதம் பொதுவாகவும், ஆகமம் சிறப்பாகவும் உள்ளன. இவை இறைவனால் அருளிச் செய்யப்பட்ட உண்மையை அறிவிக்கும் நூல்களாகும்.

வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமொன்றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம் என்பர் பெரியோர்க் கபேதமே

திருமந்திரம்- 2397

இதனையே திருஞானசம்பந்தர்

வேத முதல்வன் முதலாக விளங்கிவையம்
ஏதப்படாமை யுலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாகப் பொலிந்த
சூதன் ஒலிமலையென்றே கலிக்கோவை சொல்லே

ஞானசம்பந்தர்- தேவாரம் 3ஆம் திருமுறை- பொது.

மாணிக்கவாசகர் அவர்கள்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் மென்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழியாண்ட குரு மணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்ற ண்ணிப்பான் தாள்வாழ்க.

மாணிக்கவாசகர், திருவாசகம் சிவபுராணம் 1-4

எனப்பாடி சிறப்பிக்கின்றனர். இறைவன் வேத ஆகமங்களை அருளிச் செய்தவனாகவும், வேத முதல்வனாகவும், இறைவனே ஆகமமாகவும் இருந்து வழி நடாத்துகிறார் என்றாகிறது. இதன்மூலம் சைவர்களுக்கென தனிவேத ஆகமம் உண்டு என்பதும் இவை வடமொழி வேதாகமங்களுடன் தொடர்புடையன அல்ல என்பதும் தெளிவாகிறது.

சைவர்களின் கோட்பாடே உலகிலுள்ள எல்லா சமயங்களையும் படைத்தவன் சிவபெருமான் என்பதே. எனவே எந்த ஒரு சமயத்தையும் குறைத்துப் பேச வேண்டியதில்லை. ஏனெனில், அந்தந்தச் சமயமும் அடியார்களை இறுதியில் சிவனிடமே கொண்டு சேர்கிறது. இந்தக் கொள்கைதான் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவராயினும், அந்தச் சமயத்தின் கடவுளாகவே சிவபெருமான் தோன்றி அருள்செய்வான் எனும் சைவ சித்தாந்தக் கருத்துக்கு அடிப்படையாய் அமைந்தது.

வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துருகக் கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்து நீர்பாய

-நால்வர் நான்மணிமாலை, செய்யுள்- 1-

வேதம் ஓதினால் எவரும் கண்ணீர் விடுவதில்லை. ஆனால் திருவாசகம் ஓதும் பொழுது மனம் நெகிழ்ந்து கண்ணீர் பெருக்குவோரைக் காண்கிறோம். தென்னகத்தில் இப்பாடல்களின் செல்வாக்கு கிறித்தவர்களிடையே தேவகீதங்களுக்குள்ள செல்வாக்கைப் போன்றதாகும் என மறை திரு ஜி.யு. போப் அவர்கள் தனது நூலில் கூறி இருக்கிறார்கள். திருமுறைகளில் 9மற்றும் 11ஆம் திருமுறைகளும் தொகை நூல்வகையைச் சார்ந்தவை. 9ஆம் திருமுறை 9 அடியவர்களின் பாடல்களையும் 11ஆம் திருமுறை 40 சிறு நூல்களையும் கொண்டவை.

திருமந்திரம் மட்டுமே ஆகமங் களைப் பற்றிக்கூறும் முதல் நூலாகும். திருமுறைகளில் கண்ட நூல்களில் அனைத்திற்கும் காலத்தால் முந்தையது. மேலும் எந்த வகையிலும் சேராதது. திருமந்திரத்தில் சொல்லப்படாதது எதுவுமே இல்லை.

தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே

-திருமந்திரம்- 101-

என அவரே கூறியபடி திருமந் திரத்தை ஒன்பது தந்திரமாகப் பிரிந்து மொத்தம் 3000 பாடல்களில் பாடி இருக் கிறார். பாயிரத்தில் 3000 பாடல்கள் என திருமூலரே சொல்லி இருந்தாலும், தற் போது கிடைக்கும் நூல்களில் 3106 பாடல் கள் உள்ளன. எஞ்சிய 106 பாடல்களில் இடைச் செருகலும் ஒரே பாடலே திரும்ப வருவதும் உள்ளன.

இந்த 3106 பாடல்களில் எது எது இடைச்செருகல் எனப் புலமை நூல் ஆன்றோர்களாலேயே இனங்காணுதல் அரிது. இந்நூலில் கண்ட பாடல்களில் நடை மற்ற நூல்களைவிட எளிது. ஆனால் சரியான பொருள் காண்பது மிகமிகக் கடினம். இந்நூல் அறிஞர்களைத் திகைக்க வைத்துக் கொண்டிருக்கும் நூல். பாடல்களில் புதிரை விடுவிக்கப் புதிரையே பயன்படுத்துவது வியப்பு.

ஒன்பதாம் தந்திரத்தில் வரும் "சூனிய சம்பாஷணை" என்பது பார்ப் பதற்கு எளிதாகத் தோன்றினாலும் சிறந்த பண்டிதர்கள் மூலமே பொருள் காண முடியும்.

சாத்திர நூலாகிய "சிவஞான போத"த்தின் சுருக்கம் திருமந்திரத்தில் கீழ்க்கண்ட பாடல்களில் காணப்படுகிறது.

திருமந்திரம் 115 சிவஞானபோத சூத்திரம் 1,2,3
திருமந்திரம் 2355 சிவஞானபோத சூத்திரம் 4,5,6
திருமந்திரம் 1781 சிவஞானபோத சூத்திரம் 7,8,9
திருமந்திரம் 2366 சிவஞானபோத சூத்திரம் 10,11,12

எனவே சிவஞானபோதமே திருமந் திரப் பாடல்களின் மையக் கருத்தைக் கொண்டிருப்பதால் இந்நூலை தோத்திர நூலாகவோ, அல்லது சாத்திர நூலாகவோ வரையறுக்க இயலாததாக இருக்கிறது.

12ஆம் திருமுறை இது சேக்கிழார் பெருமானால் இயற்றப்பட்ட புராணம். இது புராண வகையைச் சேர்ந்தது. தமிழகத் தில் புராணக் காப்பியங்கள் மூலம் இதர சமயக் கருத்துக்கள் பரவுவதைத் தடுக்க எழுந்த நூல். இதில் மொத்தம் 63 நாயன் மார்களைப் பற்றியும் 7 தொகையடியார் களைப் பற்றியும் பாடப்பட்டுள்ளது. இறை வன் தென்னாட்டவன். அவர் உபதேசித்த மொழி தமிழ் என்பதற்கு 63 அடியார்களும் 9 தொகையடியார்களும் தங்களது பக்தி, தொண்டு இவற்றினால் இறைவன் அன் பைப் பெற்று ஆட்கொள்ளப்பட்டதே சான்றாகும்.

63 நாயன்மார்களில் திருநாளைப் போவார்- புலையர், கண்ணப்பர்- வேடர், திருநீலகண்டர்- குயவர், திருக்குறிப்புத்

தொண்டர்- ஏகாலி, இவர்களது உண்மைத் தொண்டினையும், இடங்கழியார், ஐயடிகள் காடவர்கோன், கழறிற்றறிவார், கழற்சிங்கர் கூற்றுவர், கோச்செங்கணான், நரசிங்க முனையரையர், நின்றசீர் நெடுமாறர், புகழச்சோழர், மங்கையற்கரசியார், மெய்ப் பொருளாளர் போன்ற அரசர்கள் தொண்டி னையும் ஒன்றாகவே மதித்துத்தான் இறைவன் முத்தி கொடுத்திருக்கிறார்.

நாயன்மார்கள் வாழ்க்கை ஒரு காப்பியமாக இயற்ற ஏற்றதாகவோ, ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவோ இருக்கவில்லை. மேலும் சில நாயன் மார்கள் களவு, கொலை முதலிய கொடுஞ் செயல்கள் செய்தவர்கள். என் றாலும் சேக்கிழார் 'சிவதர்மம்', 'பசுதர்மம்' என இரு தர்மங்களைச் சொல்லி 'சிவதர் மத்தின்முன்' பசு தர்மம் நிற்பதில்லை என்பதை நிலைநாட்டி தனது சாதுர்யத் தாலும் கற்பனை வளத்தாலும் அதனை ஓர் அழகிய காப்பியமாக்கி திருமுறை களுக்கும் காப்பியங்களுக்குமிடையில் ஓர் உயர்ந்த இடத்தை பெறும்படி செய்து விட்டார்.

## விருதுக்குரியவர்களை வாழ்த்துகின்றோம்

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சகலவிதமான சமய சமூகப் பணிகளை மேன்மையுறச் செய்யும் வகையில் பூரண ஒத்துழைப்புக்களை நல்கி வருபவர்களாகிய

**திரு க. நடேசு (தெணியான்)**
**அவர்கள்**

**திரு எல். திலகநாயகம்போல்**
**அவர்கள்**

**திருமதி மனோன்மணி சண்முகதாஸ்**
**அவர்கள்**

**திரு ஐ. கெங்காதர ஆச்சாரியார்**
**அவர்கள்**

மற்றும் வடக்கு மாகாண சபையின் பண்பாட்டு திணைக்களத்தினால் ஆளுநர் விருதுகள் பெற்ற அனைவரையும் வாழ்த்துவதோடு,

**செஞ்சொற் செல்வர் திரு ஆறு. திருமுருகன்** அவர்கட்கு புதுடில்லி தமிழ்ச்சங்கமும் திருவையாறு தமிழ் பல்கலைக்கழகமும் இணைந்து **"செந்தமிழ் ஞாயிறு"** எனும் விருதினை வழங்கியதையிட்டும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினர் இத்தகைய விருது பெற்றவர்கள் மென்மேலும் தாங்கள் ஆற்றும் பணிகளில் சிறந்து விளங்க ஸ்ரீ செல்வச்சந்நிதி வேற்பெருமானை வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

**அறிவற்றவரின் நட்பைவிட அறிவுடையவரின் பகை சிறந்தது.**

உ

(தொடர்ச்சி...

# சைவக்கிரியைகள்

**தமிழ்ஞான வித்தகர் பொன். சுகந்தன் அவர்கள்**

***சமாவர்த்தனம்***

பிரமச்சரிய முறையினை முறைப்படி முடித்தவர் இல்லறமாகிய கிருகஸ்த நிலையினை மேற்கொள்வதன் பொருட்டுப் பிரமசரிய நிலையில் இருந்து இல்லற நிலைக்கு திரும்புதலே இக்கிரியையானது குறித்து நிற்கின்றது எனலாம். சமாவர்த்தனம் என்றால் திரும்புதல் என்று பொருள்படும்.

விக்னேஸ்வர பூசையினை முடித்துச் சிவாக்கினியில் அஸ்திர மந்திரத்தால் நூறாகுதி பண்ணியே பிரமசரிய நிலையினைக் கைவிடுவார்கள். இதன்பிற்பாடே முன்பிருந்த அதாவது பிரமசரிய நிலையில் இருந்த முஞ்சிப்புற் கயிறும் பூணூலும் அகற்றப்பட்டு அதன் பிற்பாடு புதிய இரட்டைப் பூணூல் அணியப்படும். அதன்பிற்பாடு மதுவர்க்கம் பருகிச் சிவாக்கினியை வலம்வந்து குடை, பாதுகை, தண்டு போன்றவற்றுடன் பிரமசரியத்தினைக் கைவிட்ட பிள்ளை கன்னிகார்த்தமாக வடக்கு நோக்கிச் செல்லும். அதனைத் தொடர்ந்து பெண்ணைக் கொடுப்பவர் சென்று அவரை வழிமறித்துப் பிள்ளையை அழைத்து வருவார்.

எனவேதான் இக்கிரியையானது விசித்திரமானதாகவும் சிறப்பானதாகவும் அமைகின்றது. என்றால் மிகையாகாது.

***விவாகம்***

அறம் பொருள் இன்பம் வீடாகிய நான்கு பயன்களையும் பெறுவதன் பொருட்டு ஒரு வாழ்க்கைத் துணையைப் பெறுதல் விவாகமாகும்.

விவாகத்தின்போது முதலில் சங்கற்பம் செய்தல், பிள்ளையார் பூசை, புண்ணியாகம், பஞ்சகவ்வியம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம் போன்றன மணமகனுக்கு நடைபெறும். ஓமத்துக்காக அக்கினி வளர்க்கப்பட்டு அக்கினி காரியம் செய்தல் வேண்டும். அதன் பிற்பாடு பிதிரர் ஆசீர்வாதம் இடம்பெறும். குடும்ப வாழ்வானது சிறப்பாக நடைபெற முன்னோர்களது ஆசியும் வேண்டும். பிதிர்களை மகிழ்விக்க ஒருவகையான சிராத்தம் மணமகனுடைய தந்தையாலும் மணமகளுடைய தந்தையாலும் செய்யப்படும். இதன்போது பூணூலானது வலமாகத் தரித்துக்கொள்ளல் வேண்டும். தர்ப்பையைக், கிழக்குமுகமாக வைத்தல் வேண்டும். அறுகும் நெல்லுமன்றி எள்ளும் அப்பிரதட்சணமுந் தகாதவைகளாகும். ஏனையவை வழக்கமான சிராத்தம் போன்றே நிகழும். இந்நிகழ்வானது பிதிரர்களை விவாக நிகழ்வுக்கழைக்கும் தன்மையினைக் கொண்டது.

அடுத்ததாக இரட்சாபந்தனம் செய்து மணமகளை மணமகனின் வலப்பக்கத்தில் அமர்த்தி தந்தையார் கன்னிகாதானம் செய்வார். அதாவது தன் மகளை மணமகனுக்கு நீர் ஊற்றிக் கொடுக்கும் முறை. அதன் பிற்பாடு மணமகன் மணமகளின் கைப்பிடித்து அவளை ஏற்பார்.

இதன்பிற்பாடுதான் தாலிகட்டுவதற்கான கிரியைகள் இடம்பெறும். மணமகன் தாலியையும் கூறைச்சேலை முதலியவற்றினையும் மணமகளுக்குக்

கர்மங்களைச் செய்துகொண்டே யோகத்தை அனுசரிப்பவன் அறிவாளி

கொடுப்பார். முகூர்த்தக் குற்றங்களைத் தீர்க்கும் பொருட்டுத் தானம் செய்யப்படும். பிற்பாடு மணமகன் உமாமகேச மந்திரத்தால் தாலியைக்கட்டி அந்த மந்திரத்தால் முடிச்சிலே திருநீறு சாத்திப் பெண்ணுக்கும் திருநீறு சாத்துவார். அதன் பிற்பாடு மணமகள் இடப்பக்கத்திலே அமர்த்தப் படுவாள்.

அடுத்த நிகழ்வாக அக்கினிபூசை இடம்பெறும். இதன்போதும் பல கிரியைகள் இடம்பெற்று இருதய மந்திரத்தினால் பசுவையும் கன்றையும் தரிசிக்கச் செய்து மூலமந்திரத்தால் நூற்றெட்டு ஆகுதியும் செய்யப்படும். அதன் பிற்பாடு ஏழடி வைத்தல் இடம்பெறும். மணமகன் மணமகளின் கையைப்பற்றி இல்வாழ்க்கையிலே பெறவேண்டிய ஏழு பொருள்களையும் குறித்து அக்கினிக்குப் பக்கத்தே ஏழடி நடப்பார்கள். இதனை அடுத்துக் அம்மி மிதித்தல் நிகழ்வானது இடம்பெறும். இது கற்புநெறி தவறாது கணவனிலேயே பற்றோடும் பாசத்தோடும் வாழ்வதற்காய் நிலைப்படுத்தும் கிரியையாக இது உள்ளது. இதன் பிற்பாடு அக்கினியை வலம் வருகின்றமை இடம்பெறும். அத்தோடு அக்கினி காரியம் செய்தல் முக்கியமான ஒன்றாகவே அமைகின்றது. அதனை அடுத்து அருந்ததி காட்டுதலும் இடம்பெறும். அதன் பிற்பாரி பெரியோர்கள் அறுகரிசியினை இட்டு மணமக்களை ஆசீர்வதிப்பார்கள். அதன்பிற்பாடுதான் இரட்சாபந்தனம் நீக்கப்படும்.

இவ்வாறான சமயக்கிரியைகள் அதிகளவில் மணமக்களின் நன்மை கருதியே இடம்பெறுகின்றன. ஆனால் இன்றைய நிலையில் சில இடங்களில் இக்கிரியை முறைகள் மாறுபாடுகளைக் காட்டுவதனை அவதானிக்க முடிகின்றது.

நவநாகரிகம் என்ற போர்வையிலும் விஞ்ஞானத் தொழில்நுட்பங்கள் வளர்ச்சி கண்டதன் காரணத்தாலும் இன்று மணமக்களுக்கு நலனை ஏற்படுத்துகின்ற நல்ல அரிய கிரியைகள் அருகிக்கொண்டு உலகச் சுருக்கத்தோடு இவையும் சுருங்கிக்கொண்டு செல்வது பாதிப்புக் களை ஏற்படுத்துகின்ற விடயமாக அமையலாம்.

தற்போது இந்நிகழ்வினை நகைச் சுவையோடு கூறுவார்கள். புகைப்படக் காரனின் கையிலே தான் இன்றைய மண நிகழ்வுகள் தங்கியிருக்கின்றன என்று. கிரியையானது சில இடங்களில் வெறும் சாத்திர சம்பிரதாய முறையாக நோக்கப்பட்டு அதனால் ஏற்படும் குற்றம் குறைகளையும் அறியாமல் ஏற்றுக்கொள் கின்றனர்.

***தீட்சை***

தீட்சை என்னும் சொல்லுக்கு ஞானத்தைக் கொடுத்து மலத்தைக் கெடுப்பது என்பது கருத்தாக உள்ளது. தீ என்றால் கொடுத்தல் என்றும் ஷை என்றால் கெடுத்தல் என்றும் பொருள்படும். இத் தீட்சையானது சமய தீட்சை, விஷேச தீட்சை, நிர்வாண தீட்சை என மூன்று வகையாகப் பிரிக்கப்படும்.

ஒருவர் சைவசமயத்திற் புகுதற் பொருட்டுச் செய்யப்படும் தீட்சையானது சமய தீட்சை என அழைக்கப்படுகின்றது. எனவே சமயதீட்சையினைப் பெற்றுக் கொள்ளாதவன் உண்மையான சைவ சமயத்தவனாக முடியாது அவன் விவாகம், அந்தியேட்டி, சிராத்தம் போன்ற சைவக்கிரியைகளைச் செய்வதற்குத் தகுதி இல்லாதவனாகின்றான். எனவே

சைவசமயிகள் ஏழு வயது வரையிலே தீட்சை பெறவேண்டும்.

விசேட தீட்சையானது சிவபூசையினை செய்யத்தக்கவர்களுக்கும் சிவ யோகம் சாதிப்பவர்களுக்கும் பயன்படுவதனால் அவர்களே விசேட தீட்சையினைப் பெறத்தகுதியுடையவர்கள். நிர்வாண தீட்சையானது ஞானநெறியிற் செல்பவர்களுக்கு உரியனவாகக் காணப்படுகின்றது.

தீட்சையானது கிரியைகளின் தன்மைக்கு ஏற்ப ஏழு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன நயன தீட்சை, பரிசதீட்சை, மானசதீட்சை, யோக தீட்சை, வாசகதீட்சை, ஔத்திரி தீட்சை, சாத்திர தீட்சை என்பனவாகும்.

இதில் நயனதீட்சை என்றால் நயனம் என்றால் கண். ஆசாரியார் மாணாக்கனை அருட்பார்வையாகப் பார்ப்பார். அந்தப் பார்வையே அவனுடைய கர்வத்தைக் கெடுக்கும். சகல நற்குணங்களும் உண்டாவதற்குத் தலையிலே விபூதி போட்டு நெஞ்சிலே தட்டித் தர்ப்பையினாலே உடலைத் தடவுவார்.

அடுத்ததாக பரிசதீட்சையினைப் பெறுபவர்களுக்கு ஆசாரியார் தனது கையினைச் சிவபெருமானது திருக்கரமாகப் பாவித்து அவனுடைய தலையில் வைத்துச் சிவமந்திரத்தை உச்சரித்து அவனுடைய சரீரம் முழுவதனையும் தடவுவதனால் அவனுடைய ஆணவமல வலிமையை இழக்கின்றது.

யோக தீட்சையானது மாணாக்கனுடைய கையிலே தர்ப்பை அடியைக் கொடுத்து நுனியைத் தன்னுடைய முழந்தாளிற் சந்திலிடுக்கி, மாணாக்கனது இடது நாடியினையும் வலது நாடியியையும் தன்னுடைய வலது நாடி இடது நாடிகளோடு முறையே தொடுத்து அவனுடைய சிற்சக்தியை அவனது வலது நாடியாலுந் தனது இடது நாடியாலுமெடுத்துத் தன்னுடைய சிற்சத்தியோடு சேர்த்துச் சிவத்தன்மையை அடைவித்துப் பின்பு அவனிற் சேர்த்திடுவார்.

அடுத்து வருகின்ற வாசக தீட்சையானது பரிசதீட்சை பயனுறுதற்காகவும் மந்திர பூசையாகவும் மூலத்தால் நூறாகுதியும் பிரமாங்கத்தால் பப்பத்தும் பூர்ணாகுதியுஞ் செய்து எல்லாக் குற்றங்களும் தீரதற்காக மூலத்தால் நூற்றெட்டுப் பூர்ணாகுதியுஞ் செய்து பிற்பாடு மந்திரங்களையுபதேசித்துச் சிவனுக்கும் அக்கினிக்கும் அவனைக்கொண்டு பூசை செய்வித்து அவனை ஆசீர்வதித்து மூர்த்திகளை விசர்ச்சனம் செய்வது இவ்வாறான தீட்சைகளில் கூறப்பட்டவையெல்லாம் ஔத்திரி தீட்சையில் வரும்.

இவ்வாறாகத் தீட்சையினைப் பெற்றவர்கள் ஒழுக்க சீலர்களாக வாழ வேண்டும். வழிபாடு தவறாது செய்தல் வேண்டும். அத்தோடு நித்தியகர்ம முறைகளையும் ஒழுங்காகக் கடைப்பிடித்துச் செய்தல்வேண்டும். அத்தோடு உணவுத் தூய்மையாகச் சைவ அனுட்டானங்களைத் தவறாது தீட்சையில் கூறப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக கடைப்பிடித்து வருதல் வேண்டும்.

(தொடரும்....

உ

# இறப்பை எண்ணி...

**திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்**

மரணத்தைக் கண்டு நாம் அஞ்சுகின்றோம். அதைவேறு வகையில் கூறுவதானால் இந்த உடலைப் பிரிய நாம் விரும்பவில்லை. ஆனால் இந்த உடல் குப்பை என்பதை விளக்கி அதன் தன்மையை மெஞ்ஞானிகள் விளக்கியதையும் அதில் வாழ அஞ்சுவதையும் முன்னைய கட்டுரைகளிலே பார்த்தோம்.

மாணிக்கவாசகப் பெருமான் அருளிய ஆசைப்பத்திலும் அவர் இந்த உடலில் இருக்க விரும்பவில்லையெனப் பாடியுள்ளதைக் காணலாம்.

மொய்ப்பால் நரம்பு கயிறாக மூளை என்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்ககில்லேன் கூவிக் கொள்ளாய் கோவேயோ

என்றும்,

சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுந் சிறுகுடி லிதுசிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்தாட் கொள்ளுங் குருமணியே

என்றும் அவர் பாடியுள்ளதை உதாரணங்களாகக் காட்டலாம். முதலாவதில் உடலின் உள்ளேயுள்ள மூளை என்பு என்பவற்றைக் கட்டிய நரம்பு ஆகியவற்றைப் போர்த்ததோல் முதலியவற்றைக் கூறியும் அடுத்த பாடலில் சீழ் வடிந்து, ஈமொய்த்து அழுக்கொடு திரியும் உடலின் குறைகளை மனங்களிலே பதியவைத்துள்ளதும் கவனத்திற்கொள்ள வேண்டியவையாகும்.

ஒருகல் இறைவனின் உருவமாகும்போது மதிக்கப்படுகிறது. படிக்கல்லாகும் போது மிதிக்கப்படுகிறது. அதேபோன்று இந்த உடலினுள் இறைவன் குடிகொள்ளும் போது அது கோவிலாகிவிடுகிறது. மாணிக்கவாசகப் பெருந்தகை

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளிமையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே

என பிடித்த பத்திலே பாடும்போது மேற்குறித்த எண்ணந்தோன்றுகிறது. இவ்விடத்தில் காயமே கோயில் ஆகக் கடிமனம் அடிமையாக என நாவுக்கரசர் பாடி உள்ளதும் நினைவுகூரத்தக்கது. வாதவூரர் குதிரைகொள்ளச் சென்றபோது இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர். இந்த உடலிலிருந்து இந்திரியங்களின் வயப்பட்டு அதன்காரணமாய் இறந்து நரகத்தில் விழுந்து துன்பமனுபவிக்க வேண்டியவரை இறைவன் குருவாக வந்து சிந்தையைத் தெளிவித்து அதனால் அவரை சிவமாக்கி ஆட்கொண்டார்.

இந்திரிய வயம்மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்து சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள் தில்லை கண்டேனே

என்ற பாடலில் மாணிக்கவாசகரே இதனைப் பாடியுள்ளார். இறப்பின் காரணம், அதன்பின் நரகம் செல்ல நேர்தல் போன்றவை இப்பாடலில் கூறப்பட்டுள்ளன.

இத்தகைய இறப்பைக் கண்டு, ஏனைய நாயன்மார்களைப் போன்றே இவரும் அச்சங் கொள்ளவில்லை. அவர் தன்னை முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்ததே அதற்குக் காரணமாகும்.

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எலாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்டபோதே கொண்டிலையோ
எனக்கேட்கும் மாணிக்கவாசகர்
நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்
மாயப் பிறவி உன்வசமே வைத்திட் டிருக்கும் அதுவன்றி
ஆயக் கடவேன் நானோதான் என்ன தோஇங் கதிகாரம்
காயத் திடுவாய்உன் னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே

எனத் தொடர்ந்து பாடியுள்ளார். அதிகாரம் முழுவதையும் அவர் இறைவனிடம் கொடுத்துவிட்டார். அவன் உடலினுள் வைப்பான் அல்லது தன் பாதங்களிலே சேர்ப்பான். இந்த மாயப் பிறவியே அவனுடைய வசம் என அனைத்தையும் அவனிடம் அர்ப்பணித்துவிட்டார். அதனால் அவர் மரணத்திற்குப் பயப்படவில்லை. ஆனால் அவரும் சிலவற்றிற்கு அஞ்சினார்.

பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
எனப்பாடியவர் தொடர்ந்து,
துணிநிலா அணியி னான்தன் தொழும்ப ரோடழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீ(று)
அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே
எனப்பாடியுள்ளார்.

இதேபோன்றே

தகைவிலாப் பழியும் அஞ்சேன் சாதலை முன்னம் அஞ்சேன்
என்றும்
கோணிலா வாளி அஞ்சேன் கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
என்றும்

மரணத்திற்கு அஞ்சாததைக் கூறும் திருவாதவூரடிகள் அச்சப்பத்திலே தான் அஞ்சாதவற்றையும் அஞ்சுவனவற்றையும் பட்டியலிட்டுள்ளார். திருநீறு அணியாதவர், இறைவனை வாழ்த்தி வணங்காதவர், இறைவன்மேல் பக்தியில்லாதவர் என அவர் கண்டஞ்சுவோரது பட்டியல் அமைகிறது.

கூற்றுவனைக்கண்டு பயங்கொள்ளாத ஒருவர் நம்மைக்கண்டு அஞ்சினால் எப்படியிருக்கும்? நாம் காணப் பயங்கொள்ளும் கூற்றுவனைவிட நாம் பயங்கர மானவர்களாகிவிடுவோமல்லவா?

எனவே அச்சப்பத்தில் மாணிக்கவாசகப் பெருமான் நிரலிடுவோராக நாமிருக் காது நடந்துகொள்வது மிக முக்கியமானதாகும். அடுத்து மரணத்திற்கு அஞ்சா தோராக நாமும் மாறமுயல வேண்டும்.

**உண்மைக்குப் பயப்படுபவன் வேறு எவருக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை.**

உ

(தொடர்ச்சி...

# தவமுனிவனின் தமிழ் மந்திரம்- கட்டுரைத்தொடர்- 20

**சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள்**

கன்ம அனுட்டானம் மூன்று வகைப்படும். அவற்றில் முதல்நிலை சாதாரணமானது. அது ஒருவன் தன் நன்மைக்காகவே கன்மத்தைச் செய்தல் ஆகும். இரண்டாம் நிலை முன்பு கூறியதைவிடச் சற்று மேலானது. அது ஒருவன் தன் நன்மையோடு பிறர் நன்மைக்காகவும் கன்மத்தைப் புரிதல் ஆகும். மூன்றாம் நிலையே மிகவும் மேலானது. மூன்றாம்நிலை பிறர் நன்மை ஒன்றையே கருதிப் பலனை உத்தேசிக்காமல் நிஷ்காமிய கன்மத்தைச் செய்தல் ஆகும். இதனால்த்தான் தெய்வத் திருவருளை அடையமுடியும். இத்தகைய உயர்ந்த நிலையினைத் திருமந்திரத்தின் முதலாம் தந்திரம் கூறுகிறது. எந்த மார்க்கத்துக்கும் ஒழுக்கமே அடிப்படை என்பது இங்கு தெளிவாக்கப்பட்டுள்ளது.

திருமந்திர நூலின் இரண்டாம் மூன்றாம் நான்காம் தந்திரங்கள் உபாசனை எனப்படும். பக்தி மார்க்கத்தைத் தெளிவுபடுத்திக் கூறுவன இவை ஆகும். இதனில் அட்டாங்கம், ஆதாரம், மந்திரம், நிராதாரம் என்கிற மார்க்கத்துக்குரிய செய்திகள் படிப்படியாகக் கூறப்பட்டுள்ளன. இதனை மேலோட்டமாகப் பார்த்தால் சாமானிய யோக மார்க்கமாகத் தென்படும். எனினும் மனத்தை ஒருமுகப்படுத்திப் பக்தி செலுத்தும் வழிகள் இத்தந்திரங்களில் கூறப்பட்டிருத்தலைக் காணலாம்.

நான்காம் தந்திரம் ஞானத்துக்கான தொடக்க நிலையாகிய மோனத்துக்கு வழிகாட்டுவதாகும். மோனம் நிலைப்பதற்கு மனம் நிலைபெற வேண்டும். மனத்தை நிலைநிறுத்துதல் எளிதான காரியமன்று. இதற்கு நமது முயற்சியும் இறை அருளும் தேவை. இந்த இரண்டின் கூட்டுறவை எப்படிச் சாதிப்பது என்பதை நான்காம் தந்திரப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. இத்தந்திரம் மனமடக்கும் சாதனா மார்க்கத்தைக் கூறுவதாகும். இதனால் சிவயோகம் தலைப்படுவார் உள்ளத்தை உள்முகப்படுத்தி விந்து நாதங்களின் துணைக்கொண்டு அருள்வயப்பட்டு ஆண்டவனை அடையவேண்டுமென்பதைத் தெரிந்துகொள்வர்.

திருமந்திரத்தின் நான்காம் தந்திரம் மந்திரயோகத்தை விரித்துக் கூறுகிறது. இதில் உள்ள பதின்மூன்று உட்பிரிவுகளில் எட்டாவது பிரிவாக ஆதார ஆதேயம் உள்ளன. இப்பிரிவில் நூறு திருமந்திரப் பாடல்கள் உள்ளன. இதன் முன் உள்ள பூரண சக்தி என்பது நான்காம் தந்திரத்தின் நடுப்பகுதியாக இதய பாகமாக உள்ளது.

பாச சம்பந்தம் உள்ள உயிர்கள் அப்பாசத்தை விட்டுப் பதியை அடையும் படியான வழியை உணர்த்துவதே சித்தாந்த சைவத்தின் குறிக்கோள் ஆகும். "பாசத்தை பசுக்கள் விட்டுப் பதியினை அடைய முத்தி" எனச் சிவஞான சித்தியார் இதனைக் கூறுகிறது. பாசமாவது இவ்வுலகும் உலகப் பொருள்களும், உடம்பும், உடம்பில் உள்ள ஐம்பொறி, மனம், புத்தி, அகங்காரம் முதலிய கருவிகளும் ஆகும். இவையெல்லாம் அசுத்த மாயை

**தான் நேசிப்பதைக் கொடுக்காதவன் தான் விரும்புவதையும் அடையமாட்டான்.**

யின் காரியங்கள். இவை ஆணவ மல மாகிய குற்றத்தை உடைய உயிர் களுக்கு அறிவை விளக்கும் கருவியாக உள்ளன. ஆணவமலம் சக்தி கெடவும் அசுத்த மாயையின் சம்பந்தம் நீங்கவும் துணை செய்வது சுத்த மாயையே ஆகும். சுத்த மாயையை நூல்கள் மகா மாயை, குண்டலினி, விந்து முதலிய பெயர்களால் வழங்குகின்றன.

நான்காம் தந்திரத்திலே கூறப்படும் மந்திரங்கள், சக்கரங்கள் மூர்த்திகளாகிய எல்லாம் நமது அறிவைச் சுத்தமாயா காரியங்களைப் பற்றச்செய்து அசுத்த மாயா காரியப்பற்றை நீங்கச் செய்வன ஆகும். இங்கே கூறப்பட்டுள்ள தியான யோகங்களிலே நிற்கும்போது அவ்வாறு நிற்போருக்குப் பல சித்திகள் இடைப் பலன்களாகக் கைகூடும். இத்தகைய சித்திகள் கிடைப்பவர்கள் அதில் மயங்கக் கூடாது. இறைவன் திருவருளே சக்தி எனப்படும். சக்தி எங்கும் வியாபித்து நின்று எல்லாப் பொருள்களையும் தொழிற் படுத்தி உயிர்களின் அறிவு முயற்சி என் பதை மலர்விப்பதாக உள்ளது. உயிர்கள் அத்திருவருளையே முடிவில் பற்ற வேண் டும். அத்திருவருளே எல்லாவற்றிற்கும் அடிப்படையாய், சார்பாய் உள்ளது என்று உணர்த்துவதே ஆதார ஆதேயம் என்னும் பகுதியாகும்.

ஆதாரம் என்ற சொல் சார்பாக உள்ள இடத்தைக் குறிக்கும். ஆதாயம் இடத்தில் நிகழ்பொருளைக் குறிக்கும். இறைவனது திருவருளாகிய சக்தி உலகு உயிர் அனைத்திற்கும் ஆதாரம். உலகு உயிர் அனைத்தும் ஆதேயம் திருவருளை முதல்வனது திருவடி எனக்கூறுவர் பெரியோர். திருவருளே உலகு உயிர் அனைத்திற்கும் ஆதாரமாக உள்ளது என்னும் அடிப்படை உண்மையினை மெய்கண்டதேவர்

"தாரகன் ஆம் அத்தன் தாள் நிற்றல்
அவர் வினையால் வித்தகமாம்"

என்னும் தொடரால் குறிப்பிடுகின்றார்.

முதற்பொருளாகிய கடவுள் முதற்பொருள் தன்னையே காணும்போது பேரானந்தப் பொருளாய், செம்பொருளாய் அறிவே வடிவாயுள்ள சிவம் எனப்பெயர் பெறுகிறது. உலகு, உயிர் அனைத் தையும் தன் நிறைவுள் அடக்கிக்கொண்டு உயிர்களுக்குப் பிற பொருள்களைக் காட்டி நிற்கும் இயல்பிற் சக்தி எனப் பெயர்பெறுகிறது. ஒளிபோலச் சுடரைக் காணும்போது அதனைக் காட்டி நிற்பன வும் ஒளிக்கதிர்களே ஆகும். அதுபோல மெய்யுணர்ந்தோர் முதற் பொருளைத் தலைப்பட்டு உணரும்போது அம்முதற் பொருளின் குணமாகவும் சொரூபமாகவும் திருவருளே உள்ளது. உடம்பின் ஆறு நிலைகளாகிய மூலாதாரம், சுவாதிட்டா னம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களையும் தாமரைப் பூவாக உருவகித்து இவ் இடங்களில் நின்று இவற்றை இயக்கும் ஆதார சக்தியாகத் திருவருட்சக்தி கூறப் பட்டுள்ளது.

திருவருள் சக்தி தன் உயிர்க்கு உயிராய் விளங்கும் சிவனையே நோக்கி நின்றாள். அவரின் திருவுள்ளப்படி வேதா கமப் பொருளை விரித்துக் கூறினாள்.

மாது நல்லாளாகிய திருவருட் சக்தி அவர் மணாளனாகிய சிவன் தன் உடம்பில் செம்பாதி கொள்ள இடம் கொடுத்துப் பாதி நல்லாள் ஆயினாள். சிவனும் அம்பிகைக்குப் பாதி இடம் கொடுத்துப் பகவானாயினான். அத்தகைய அறிவுப் பேரொளியாக இருக்கின்ற அருட் சக்தியை ஆருயிர்த் துணையாகக் கொள் பவருக்குப் பிறவித் துன்பம் நீங்கும். சக்தி வழிபாட்டினால் ஆன்மா எய்தும் பலனைப் பின்வரும் ஆதாரவாதேயத்தில் வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

மாது நல்லாளும் மணாளன் இருந்திடப்
பாதி நல்லாளும் பகவனுமானது
சோதி நல்லாளைத் துணைப்பெய்ய வல்லிரேல்
வேதனை தீர் தரும் வெள்ளடையாமே

யோகப் பயிற்சி செய்பவர்களுக்கு சக்தி குண்டலினி சக்தியாகத் திகழ்கிறாள். அத்தகையவளின் இயல்பை அறிந்து மேல் எழச் செய்தால் அவள் வீடு அளிக்கும் தலைவி ஆவாள். யோக நெறியில் நிற்பவர்கள் உச்சியில் அமிர்தத்தைச் சுவைப்பார்கள். இந்த உண்மையை அறிந்து பக்தியைச் செலுத்தாமல் வீணே ஆரவாரம் செய்பவர்கள் நாய்போன்று கத்தியபடி இருக்கின்றார்கள்.

"கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்
கத்தித் திரிவர் கழுவடி நாய்போல்"

என வேறொரு திருமந்திரப்பாடல் இதனைக் குறிப்பிடுகிறது. நாடகத்தால் உன் அடியார்போல் நடிக்கும் பக்தியையும், அதனால் ஏற்படும் ஆரவாரப் பேச்சுக்களையும், தர்க்க வாதங்களையும் பின்வரும் பாடலின் ஊடாகத் திருமூலர் கண்டிக்கிறார்.

சக்தியென்பாளொரு சாதகப் பெண்பிள்ளை
முத்திக்கு நாயகி யென்ப தறிகிலர்
பக்தியைப் பாழிலுகுத்தவப் பாவிகள்
கத்திய நாய்போற் கத்துகின்றாரே

ஆன்ம விடுதலைக்குரிய பாதை எதுவென்று தெரியாது பலர் தத்தளிக்கிறார்கள். மனம் ஒரு நெறிப்படாது அதுவழி என்றும், இது வழி என்றும் மயங்கி வீண்காலம் போக்குகின்றார்கள். மூலாதாரத்தில் விளங்கும் குண்டலினி சக்தியை மேலெழுப்பவே தலையில் விளங்கும் சிவத்துடன் பொருத்தி வழிபடல் சிறந்த வழியாகும். இத்தகைய நெறியினைக் கடைப்பிடிப்பவர்கள் விதியை வெல்லும் ஆற்றலைப் பெறுவர். பிறப்பு இறப்பு என்னும் சுழற்சியில் இருந்து விடுதலை பெறுவர்.

அது இது என்று அவமே கழியாதே
மதுவிரி பூங்குழல் மங்கை நல்லாளைப்
பதிஅது மேவிப் பணிய வல்லார்க்கு
விதி வழி தன்னையும் வென்றிடல் ஆமே.

ஆன்மா அருள்வயப்பட்டு ஆண்டவனை அடையுமார்க்கத்தின் படிமுறையில் ஒன்பதாவதாக நிற்பது ஓரொளிச் சக்கரம் அல்லது அருளொளி அழகொளிக் காட்சியாகும். ஓர் என்பது எழுச்சி எனவும் அழகு எனவும் பொருள் தரும். ஒளி என்பது சோதி ஆகும். சக்கரம் என்பது செம்மையாகச் செய்வது எனப்பொருள்படும். சக்கரம் யந்திரம் என்றும் கூறப்படும். உள்ளொளியை எழுப்பித் திருவருளொளியில் கலக்கச் செய்வதற்கான முயற்சியை அனுபவபூர்வமாக்குதலே ஓரொளிச் சக்கரம் என்பதன் பொருள் ஆகும்.

காற்று ஒளியை ஆக்குதலும் செய்யும், அழித்தலும் செய்யும். அவ்வாறே சக்கரத்துக்கும் விளைவிப்பதும் தொலைப்பதுமாகிய இரண்டுவகை ஆற்றலும் உண்டு. எல்லாப் புவனங்களையும் உண்டாக்கும் ஆற்றலும் அவற்றை ஒடுக்கும் ஆற்றலும் ஒளிக்கு உண்டு. ஆக்கும் ஆற்றலை ஓரொளி என்பர். அழிக்கும் ஆற்றலைக் காரொளி என்பர். சிவ ஒளியை அருள் ஒளியால் அடைவதே முறை. அருள் ஒளியை நாம் கைக்கொண்டால் நல்வாழ்வு கிடைக்கும்.

கண்ணில் ஒளி உள்ளது. இருட்டில் வேறோர் ஒளியின் துணை இல்லாமல் அது பொருளை அறியமுடியாது. வேறோர் ஒளியுடன் கூடின் கண் எப்பொருளையும் காண வல்லதாகிறது. ஆணவ இருளில் உள்ள ஆன்மா தன்னையும் காணாது, தலைவனையும் அறியாது தவித்து நிற்கிறது. ஆன்மா அருளொளியாம் ஞானத்தினை துணையாகக் கொள்ளின் தத்துவங்களின் தன்மையை அறிவதோடு தன்னையும் தலைவனையும் அறியும் திறனையும் பெறும்.

ஒரு விளக்கொளியைச் சூரியவொளி முன் வைத்தால் விளக்கொளி தன் ஒளியைப் பேரொளியான சூரியன் ஒளியிலே ஒடுங்கச்செய்து விடுகிறது. தான் ஓர் ஒளியற்ற பொருள்போல அடங்கி நிற்கிறது. விளக்கொளி போலவே நமக்குள்ளேயும் ஒளி உள்ளது. அது இருக்குமிடத்தை நாம் அறியவேண்டும். அதை வெளிக்கிளப்ப வேண்டும். அருளொளியுடன் அதனைக் கலக்கச் செய்ய வேண்டும். இவற்றைக் கூறும் பகுதியே ஓரொளிச் சக்கரம் ஆகும். ஓரொளிச் சாதனத்தை துணைக் கொண்டால் நாம் பிறப்பை அறுக்கலாம். ஓரொளித் துணையே பேரொளியாம் சிவ ஒளியைக் காட்டவல்லது ஆகும்.

ஓரொளிக்கு ஆதாரத்தானம் உடம்பில் உள்ள மூலாதாரம் ஆகும். இது பொன்னிறமான அக்கினித் தானமாகும். இங்குள்ள கதிரொளியை அக்கினிப் பீஜமந்திரத்தினால் எழுப்பி மேலே உள்ள ஆயிர இதழ்க் கதிரொளியிற் கலக்கச் செய்துவிடுவது தான் யோகம் எனப்படும். இவ்வாறு அகத்தும் புறத்தும் ஒளிக்காட்சி பெற்றோர் தன் இழப்புப் பெற்றுச் சிவத்தினை அருள் ஒளியால் அடைந்து இன்புறுவர். இதனையே "மன்று நிறைந்த மணிவிளக்குக் காட்சி" எனத் திருமூலர் கூறுகிறார். இவற்றை எல்லாம் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

ஓரொளி உள் எழு தாமரை நால் இதழ்
ஓரொளி விந்துவினால் எழும் நாதம் ஆம்

**காலத்தை வீணாக்குவது என்பது தன்னைத்தானே கொள்ளையடிப்பதற்குச் சமம்.**

ஒரொளி அக்கலை எங்கும் நிறைந்த பின்
ஒரொளிச் சக்கரம் அந்நடு வன்னியே

தனக்குள்ளே சிவத்தைத் தேடித் தெளிவுகண்ட அடியவர்க்கு உண்டான தம்பனம், மாரணம், வசியம் என்பவை இயல்பாகவே வந்து பொருந்தும். இவர்களின் இருப்பிடத்திற் பகைவரும் வந்து அடையமாட்டார். இவ் உண்மையை அருட்சக்தியின் திருவருளால் தெளிந்து கொள்வார்க்குப் பகையே உண்டாகாது.

கூடிய தம்பனம் மாரணம் வசியம்
ஆடு இயல்பாக அமைந்து செறிந்திடும்
பாடியுள்ளாகப் பகைவரும் வந்துறார்
தேடி உள் ஆகத் தெளிந்து கொள்வார்க்கே

(தொடரும்..

## 2007ஆம் ஆண்டு உற்சவம் தொடக்கம் நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| தி. தவபாக்கியராசா | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| R. கார்த்திகேசன் பத்தமேனி | கொழும்பு | 5000. 00 |
| இ. ஜீவசிங்கா | நியூசிலாந்து | 1000. 00 |
| இ. கிருபாலசிங்கா | U.K | 1000. 00 |
| இ. மகாதேவன் | வட்டுக்கோட்டை | 6000. 00 |
| இ. மனோகரன் மனோ லைற் | கோப்பாய் | 1000. 00 |
| விமலேந்திரன் யுகன் (ஜேர்மன்) | புலோலி | 3000. 00 |
| நற்குணம் விஜிதா | | 500. 00 |
| சுப்பிரமணியம் உருக்குமணி | உரும்பராய் | 5000. 00 |
| சிவகுமார் குணபூசனி | | 500. 00 |
| செல்வி அபிராமி தங்கேஸ்வரன் | கொழும்பு | 3000. 00 |
| Dr. G. பவானி மகப்பேற்று நிபுணர் | யாழ்ப்பாணம் | 20000. 00 |
| திருமதி புனிதவதி சண்முகலிங்கம் | ஆசிரியை கரணவாய் | 5000. 00 |
| கார்த்திகேசு சிவத்தம்பி குடும்பம் | கொழும்பு | 5000. 00 |
| ஏரம்பமூர்த்தி நினைவு சிவபாக்கியம் | குப்பிளான் | 50k அரிசி |
| ஆ. ஜெகநாதன் அதிபர் | பருத்தித்துறை | 2000. 00 |
| ச. விக்னேஸ்வரன் | நீர்வேலி | 1000. 00 |
| A. மகாலிங்கம் | வத்தளை | 2500. 00 |
| வ. ஜெயகுமாரன் விவேகானந்தாவீதி | கொழும்பு | 3000. 00 |
| ஜெ. இராகவேந்திரன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| பா. இராசேந்திரம் G.S மோகன் இல்லம் உடுப்பிட்டி | | 2000. 00 |
| செல்வி வி. வடிவாம்பிகை துர்க்காபுரம் தெல்லிப்பழை | | 1000. 00 |
| திரு திருமதி வடிவேலு பாலச்சந்திரன் குடும்பம் பிரான்ஸ் | | 5000. 00 |

(தொடரும்...

நமது இன்றைய நிலையின் காரணம் நாம் எண்ணிய எண்ணங்களே.

உ

# இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே

**பேரறிஞர் ஆழ்கடலான் முருகவே பரமநாதன் அவர்கள்**

இப்பாடல்வரி ஒவ்வொரு தமிழறிந் தோரையும் சிந்திக்கவே வைக்கும். எதன் இயல்புணர்ந்தோர்- மனித வாழ்வின் இரு வேறுபட்ட தன்மைகளை உணர்ந்தோர் எனப் பதில் வரும். வாழ்வு இன்பமய மானதுமன்று துன்பமயமானதுமன்று. இப்படியான வாழ்வில் இன்பமும் துன்ப மும் இயற்கை எனினும் நம்மை எதிர் நோக்கும் நெருக்கடிகட்கு நாம் முகம் கொடுக்க வேண்டும். நிலவும் இருட்டும் போன்றது வாழ்வமைதி. பதினாறு (நாழிகை) போனால் விடியும், பதினாறு போனால் இருளும் என்றோர் வாசகம் உண்டு. வாழ்வின் இரு கரைகளும் எதிர் புதிரானவை. இன்பம், துன்பம், வறுமை, செல்வம், ஏற்றம், இறக்கம், சுகம், துக்கம் என இவை பாகுபாடு உடையன.

வளமான வாழ்வெனின், சகல சம்பத்தோடும் வாழ்வதெனப் பொருள் கொள்வர். மனிதவர்க்கம் பெருமைப் படுத்திக் கொள்கிறது. நிம்மதியோடு மனச்சாந்தி காண்பவர் சாந்தியும், சந்துஷ்டியும், அமைதியும் காண்பரென நாம் கருதுகின்றோம். நினைப்பதெல்லாம் நிறைவேறுவதில்லை. கூடின விழுக்காடு நீரோசையோடு வாழ்ந்த ஒருவருக்குத் திடீரென நெஞ்சு நோகிறது என்றார். அவரின் மிக உயர்ந்த வாகனத்தில் ஏற்றி வைத்திய சாலைக்குச் சென்றனர். அங்கே சேவை செய்யும் பேர்பெற்ற மருத்துவர் களால் அவரைக் காப்பாற்ற முடிய வில்லை. பிணத்தைப் பெட்டியிலடைத்துச் சொகுசான வாகனத்தில் சென்ற அவரின் உடலை, வாகனத்தின் கூடாரத்தில் உள்ள சாவுசட்டத்தில் ஏற்றிக் கட்டி வீட்டுக்குச் சென்றனர். பிணத்தைக் கீழே எடுங்கள் என்றனர். எல்லோரும் கதறி அழுதனர். எல்லாக் கருமங்களையும் நிறைவேற்றிவிட்டுத் தூல உடம்பைப் பாடையில் ஏத்திச் சுடலைக்கு விரைகின் றனர். தெரிந்த தெரியாதவர்கள் பிரேதம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது எனப் பேசிக்கொள்கின்றனர். இந்த இழிநிலை மனிதனுக்கு வந்துவிட்டது. இந்த அவலங் களை எந்த அளவில் மனத்திலே போட்டுக் கொள்கின்றோம். நாம் எமது வாழ்வியலின் இருவேறுபட்ட விதங்களை அனுபவத் தால், கல்வியால், பட்டறிவு, உற்றறிவால் உணர்ந்து ஏற்ற இறக்கங்களை ஓர்ந்து, இவை நமக்கு இயற்கையென உணர்ந்து மேலும் தொடர்வோமாக.

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தரு கேயினிச் சாம்பிணங்கள்
கத்தும் கணக்கென்ன காண்கயி லாபுரிக் காளத்தியே.

பட்டினத்தார் பாடல் காளத்தி 27

மழலையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்

காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
மீளுமில் வியல்பு மின்னே
மேல்வரும் மூப்பு மாகி
நாளும்நாள் சாகின் றாமால்
நமக்குநாம் அழாத தென்னே

குண்டலகேசி

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்பார்
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்ததே என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே

திருமந்திரம் 148

அடுதல்- சமைத்தல், அடிசில்- உணவு, இறை- கொஞ்சம், மந்தணம்- சிற்றின்பம், இரகசியம்

ஊர் எலாங் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டு
சூரைய ங்காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழுகி நினைப்பு ஒழிந்தார்களே

திருமந்திரம் 146

சூரை- முள்மரம், காடு- சுடலை.

இப்படியான வாழ்க்கையின் ஒவ்வொரு பக்கமாகப் பகுத்துப் பார்த்துத் தீமையகற்றி நன்மை செய்து மற்றவரும் வாழ வழிவகுத்து நாமும் பொல்லாங்கின்றி வாழ்வதே உயர்ந்த வாழ்வாம். உரோமாபுரியின் மாமன்னர் மார்க்க அரேபியரின் திருவாக்கும் இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியதே.

"நீ இவ்வுலகத்தினின்று ஐந்து வருடம் முன்போனால் என்ன? பின்பு போனால் என்ன? எந்தச்சக்தி உன்னை உண்டாக்கிற்றோ, அந்தச் சக்தி உன்னைப் போ என்கிறது. இதில் என்ன குற்றம்? நாடகத் தலைவன் நடிகனைப்போ என்பதில் என்னபிழை? 'ஐயோ! நாடகம் முழுவதும் ஆடவில்லையே' என்பாய். நாடகம் முடியவில்லை என்பது உண்மை. ஆனால் முடியாத நாடகமே நாடகம். நாடகத்தலைவரால் இட்ட முடிபே முடிபு. நாடகத்துக்காவது நாடகத்தின் முடிவுக்காவது நீ தலைவன் அல்லன். ஆகையால் கலங்காமல் உடலைவிட்டு நீங்குவாயாக சாந்தி அடைவாய். தெய்வமே சரண்.

ஆத்மசிந்தனை ராஜாஜி மொழி பெயர்ப்பு எந்த நாட்டுக்கும் பொதுவிதியொன்றுண்டு. அதுவே இறுதி யாத்திரை. பிறப்புண்டேல் இறப்பும் உண்டு. இஃது உலகியற்கை.

இஃதே போலும் காயும் பழமும் நிறைந்த மரம்போல மனிதவாழ்வு. இன்னாத இனிய சம்பவங்களை இணைத்து ஒப்பீட்டு நெறியில் புறநானூற்றுப் பாடலொன்று எமக்கு விழிப்புணர்வு தருகிறது.

**காலமே உன் உயிர் அதை வீணாக்குவது உன்னையே நீ கொலைசெய்வது போலாகும்.**

ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணிததும்ப
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பணிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்ற அப் பண்பிலாளன்
இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே

புறநானூறு 194

இவ்வுலக இருவேறுபட்ட நியதியை எடுத்துப்பேசிய புலவர் இந்த இருவேறு பட்ட வாழ்வினின் இதய மகிழ்ச்சியையும், எதிரான துன்பத்தையும் விளக்கி இது உங்கட்கும் பொது, இந்த இனிய இன்னாத நிலையைப் பகுத்தாய்ந்து நல்ல சமூகக் கண்ணோட்டத்துடன் உங்களை நெறிப்படுத்துங்களென பல நூற்றாண்டு கட்கு முன்னரே புலவன் அறிவுறுத்தி யுள்ளான்.

ஒரு வீட்டிலே திருமணச்சடங்கு நடைபெறுகின்றது. அங்கே மங்களமான வாத்தியம் முழங்குகிறது. மணவீடே பிண வீடாவதும் இயற்கை. இன்னோர் இல்லத்தில் ஒருவர் இறந்து போனார். அங்கே அமங்கலப்பறையடிக்கின்றனர். ஒப்பாரி ஓலம். இன்னோர் மனையிற் காதலனும் காதலியும் இணை விழைச்சாற் சிற்றின்பம் அனுபவிக்கின்றனர் இன்னோர் வீட்டில் ஒரு காதலி தன் காதலன் தொழில் காரணமாய் வெளிநாடு சென்று வரவில்லையே எனக் கண்ணீரோடு கரைந்து போகின்றாள். இப்படி இவ்வுலகியல் மாறுபடுவதை நாம் சிந்திப்பதில்லை. எனவே (இப்படி) இரு வேறுபட்ட வாழ்வினமைப்பை நன்கு ஆராய்ந்து எல்லாம் சிவன்செயலேயெனக் கண்டு மகிழ்ச்சியுடன் வாழப்பழகுங்கள் எனச் சுமார் ஆயிரத்து ஐந்நூறு ஆண்டு கட்குமுன் ஓர் தமிழ்ப்புலவன் எழுதி வைத்தானே. இதைநாம் உள்ளூரச் சிந்தியாமல் வாழ்வைப் போட்டடிக்கிறோம். இன்றைய தமிழர் இவைகளைப் படிப்பதில்லை. நீதி வழுவா நெறிமுறையிற் தம்மை இட்டுச் செல்வதில்லை. இதனால் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வியல் என்னாகும். சிந்திப்போம். சீர் தூக்குவோம்.

நாம் மேலோட்டமாகவே எதையும் கண்டுகொண்டுள்ளோம். ஒவ்வொரு சம்பவங்களிலும் ஆழங்காற்படுவதில்லை. பசியேயறியாதவற்குப் பாயசத்தோடு அன்னமளிக்கிறோம். அன்றுமுதல் இன்று வரை இரப்போரை வளர்க்கிறோம். இந்த நிலை இல்லாமற்போகவேண்டுமென ஐயன் வள்ளுவன் அன்றே எழுதி வைத்தான்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக இவ்வுலகியற்றி யான்

குறட்பா 1062

இவ்வுலகைப் படைத்தவன் சில உயிர்களுக்கு இரத்தலையும் ஒரு தொழிலாகப் படைத்திருப்பானாயின் அத்தீவினையால் அவனும் அங்ஙனம் பிச்சையெடுத்து அலைவானாக என்பது இக்குறளின் பொருளாம்.

இதையே பின்னால் வந்த பாரதி "இனியொருவிதி செய்வோம் அதை எந்த நாளுங் காப்போம். தனியொருவனுக்கு உணவிலையெனின் இச்சகத்தினை அழித்திடுவோ"மெனப் பாடினான். இந்தநிலை மாறுவதெப்போ. மனிதம் வாழுவதெப்போ? சிந்திப்போம்.

கல்வி வல்லார் பலர் வறுமையோடு போராடுவதும், சிலர் செல்வத்திற் திளைப்பதுமேனென்ற வினாவுக்கு விடை பகர்கின்றார் வள்ளுவனார்.

இருவேறு உலகத்து இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு

குறட்பா 374

ஒருவன் செல்வம் நிறைந்து காணப்படுகிறான், மற்றவன் கல்வி நிறைந்து காணப்படுகிறான். இவ்விரண்டிற்கும் விதிதான் (முன்வினை) காரணம். இது உலக இயல்பு.

இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்

குறட்பா 270

இலர்பலர் ஆகிய காரணம்- உலகத்துச் செல்வர்கள் சிலராக நல்கூர்ந்தார் (வறியோர்) பலர் ஆதற்குக் காரணம் யாதெனின்; நோற்பார் சிலர், நோலாதவர் பலர்- அது தவஞ்செய்வார் சிலராக அது செய்யாதவர் பலராதல்.

எனவே எம்தவம் மனிதப்பிறவிக்கு இன்றியமையாததாம். தவம் செய்வார் தங்கருமஞ் செய்வார். மற்றல்லார் அவஞ்செய்வார். ஆசையுட்பட்டு எனப்பேசுகிறார் வள்ளுவர்; தவம் செய்கின்றவரே தமக்குரிய கடமையைச் செய்கின்றவர் ஆவர், மற்றையோர் ஆசைக்குட்பட்டு வீண்முயற்சி செய்பவர் ஆவர். என்பது இப்பாடலின் பொருளாகும். இதையே சுயதருமம் என்று கீதாசிரியன் பகர்ந்தார்.

எனவே வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவரே அமர்ந்தவர்கள். தாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க வேண்டும். எது இனியது எது இன்னாதது என்பதையும் சிந்திக்க வேண்டும். இனிமையாய்ப் பேசுவோம் பிறருடன் இதமாக வாழ்வோம்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய் கவர்ந்தற்று

குறட்பா 100

கனிந்த இனிமையான நறிய பழங்கள் ஒரு மரத்திலே நிறைந்திருக்க யாரேனும் காய்பறிப்பாரோ. அஃது போன்றே இனிய சொற்கள் தமிழிலே நிறைய இருக்க, கடுஞ்சொற்களை, நாராசம் போன்ற வன்சொற்களை நாம் பாவிப்பது இதமாய்ப் பேசுவோம். இங்கிதமாய் நடப்போம். எம்மாலே இயன்றவற்றைச் செய்ய நாமேன் பின்நிற்க வேண்டும். இதைத்திருமூலர் எடுத்தியம்புமாற்றால் காண்போம்.

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே

திருமந்திரம் 252

இறைவன்- சிவன், வாயுறை- ஒருவாய் உணவு, ஒரு கைப்பிடி- ஒருபிடி சாப்பாடு- சிறிது உணவு, பச்சிலை- வில்வம்

எனவே எமது வாழ்வுப்பயணத்தின் ஒவ்வொரு காலடிகளையும் நிதானமாகவும்- நீதியாகவும் பதிப்போம். இவ்வுலகின் இயற்கைகண்டு இனிய காண்போமாக.

பிச்சைபுக் காயினுங் கற்றல் மிகஇனிதே
கற்றவை கை கொடுத்தல் சாலவு முன்னினிதே
முத்தோ முறுவலார் சொல்லினிது, ஆங்கினிதே
தெற்றவு மேலாயார்ச் சேர்வு

இன்னா நாற்பது 2

பிச்சையெடுத்தாயினும், கல்விகற்பது மிகவும் இனிதாகும். தாம் கற்றவற்றை அவையின்முன் மறக்காமல் விரித்துரைப்பது மிகவும் இனிதாகும்.

முத்துப்போன்ற அழகான பற்களை உடைய மகளிரின் சொற்கள் கேட்குந்தோறும் இனியதாகும். அதுபோல, மேன்மையுடைய சான்றோர்களைச் சார்ந்து நிற்றல் எண்ணுந்தோறும் இன்பம் பயப்பதாகும்.

இறைவன் அருட்குடைக்கீழ் எல்லோரும் இன்ப
நிறைவுற்று வாழ்கநிதம்

யோகசித்தி.

---

## சஞ்சலம் தீர்த்திடும் சந்நிதி முருகா

சந்நிதி முருகா! சந்நிதி முருகா!
சஞ்சலம் தீர்த்திடும் சந்நிதி முருகா
வந்துனைத் தொழுதிடும் அடியரைக் காத்திடு
வாழ வைத்திடு அப்பனே முருகா
எந்தத் துன்பமும் அணுகாது அவர்களை
இன்பமாய் வாழ வைத்திடு முருகா
சிந்தை நொந்து வந்திடும் அவர்க்குத்
தேறுதல் தந்து ஆறுதல் அளித்திடு

***கவிஞர் வ. யோகானந்தசிவம் அவர்கள்***

உ

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் சமூகப் பணிகள்

**திரு இரா. ஸ்ரீநடராசா அவர்கள்**

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது'' என்று கூறிய ஒளவையார் இந்த மானிடப்பிறப்பெடுத்த எம்மைப் பார்த்து "அறம் செய்ய விரும்பு" என்றும் கூறியுள்ளார். அறம் என்பது என்ன என்று கேட்டால் உலகில் வாழும் உயிர்களுக்குத் தொண்டு செய்வதைத் தவிர வேறு அறம் ஒன்றும் இல்லை. இறைவன் ஒவ்வொரு ஜீவனிலும் குடி கொண்டிருக்கிறான். மக்களுக்கு சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்கிறான். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு. ஆண்டவனைத் தேடி நாம் எங்கும் செல்லத்தேவையில்லை. துன்பப்படுபவர்கள், ஏழைகள், பலவீனர் கள் இவர்கள் அனைவரும் தெய்வ வடிவங்களே. இவர்களைப் பற்றிச் சிந்தித்து, இவர்களுக்குத் தொண்டு செய் வதே மேலான அறமாகும்.

இத்தகைய அறப்பணிகளைச் செய்துவரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் சேவைகள் எண்ணிலடங்காதவை. அவற் றுள் முதன்மையானது நித்திய அன்னப் பணியாகும். செல்வச்சந்நிதி முருகனை சைவ மக்களாகிய நாம் சந்நிதியான், ஆற்றங்கரையான் என்று பல்வேறு நாமம் கொண்டு அழைத்தாலும் அவனைச் சிறப்பாக "அன்னதானக் கந்தன்" என்று அழைப்பது மிகவும் சிறப்புக்குரியது. இதற்குக் காரணமாக இந்த ஆலயச் சுற்றாடலிலே ஐம்பதிற்கும் மேற்பட்ட அன்னதான மடங்கள் அமைக்கப்பட்டு இங்கு வரும் அடியார்களின் பசி தீர்த்த வரலாறு உண்டு. அம்மடாலயங்களில் பல இன்று அழிந்து விட்டாலும் இன்று சில மடாலயங்கள் தம் பணியைச் செய்துவரு கின்றன. "சந்நிதியான் ஆச்சிரமம்" என்ற பெயரோடு தனது பணிகளைச் செவ்வனே செய்துவரும் இந்த மடாலயத்தின் தொண் டர்கள் தமது பணிகளை மிகவும் சிறப்புறச் செய்துவருகிறார்கள். இதயபூர்வமாகச் சேவை செய்பவர்களுக்கு இறைவன் உதவி புரிவான் என்ற உண்மையை நாம் இங்கு கண்டுகொள்ளலாம். இவர்கள் செய்துவரும் தொண்டிற்குத் தேவையான உதவிகள் முருகன் அருளால் வந்து சேருகின்றன.

நாம் எம்மைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தால் மகிழ்ச்சி ஒருபோதும் கிட்டாது. நாம் பிறரை மகிழ்விக்கும் போது தான் எமக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. அந்த மகிழ்ச்சியை நாம் அடைவதற்கு எம்மால் முடிந்த அளவு இவ்வாறான அற நிலையங்களினூடாக எமது பங்களிப்பை வழங்கவேண்டியது அவசியமாகும். "வாழ்க்கை என்னும் கத்தி பயன்படாமல் துருப்பிடித்து அழிந்துபோவதைவிட தொண்டு செய்து தேய்ந்துபோவதே மேல்" என்பது சுவாமி விவேகானந்தரின் கருத் தாகும். நம்மீது நிபந்தனைகளை ஏற்றாமல் இறைவன் எமக்குக் கொடுப்பதுபோல நாமும் பிறர்மீது நிபந்தனைகள் ஏதுமின்றி

**தீய செயல்களிலிருந்து நம்மைத் தடுப்பவன் நண்பன்.**

உதவிபுரிய வேண்டும். இந்த உண்மையின் அடிப்படையில் சந்நிதியான் ஆச்சிரமம் சமயத்தினூடாகச் சமூகப் பணிகளை செய்துவருவது போற்றுதற்குரியதாகும்.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் அறப்பணிகளின் வரிசையிலே நோயாளிகளுக்கு வேண்டிய வைத்திய ஆலோசனைகளையும், மருந்து வகைகளையும் பெற்றுக்கொடுத்தல், வறிய மாணவர்கள் கல்வி கற்பதற்கு வேண்டிய கற்றல் உபகரணங்கள், சீருடை, துவிச்சக்கரவண்டி போன்ற வசதிகளை வழங்குதல். போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறினாலும் தினமும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அல்லற்படும் மக்களுக்கு தமது உதவிகளை வழங்கி வருகின்றனர்.

சமுதாயத்திற்குத் தொண்டுபுரியும் இந்த அறநிலையத்தின் ஒரு பகுதியாக "சைவ கலை பண்பாட்டுப் பேரவை" 1992இல் ஆரம்பிக்கப்பட்டு அதனூடாக சைவக் கலை பண்பாடு போற்றப்பட்டும் வளர்க்கப்பட்டும் வருகின்றது. இப்பேரவையின் மூலம் 1993ஆம் ஆண்டு தொடக்கம் வைகாசிப் பெருவிழா ஆண்டுதோறும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில் சமுதாயப் பணிபுரியும் பெரியோர்கள் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். மேலும் இப்பேரவையின் அனுசரணையுடன் 1998ஆம் ஆண்டு தொடக்கம் மாதந்தோறும் "ஞானச்சுடர்" என்னும் இந்தச் சமய சஞ்சிகை வெளியிடப்பட்டு வருவது சிறப்பான பணியாகும். சந்நிதி முருகனின் அருட்கடாட்சத்துடன் இச்சஞ்சிகை சமயக் கருத்துக்களையும், ஆன்மீகச் சிந்தனைகளையும் தாங்கி வருவதன்மூலம் சைவசமய உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டு வருவதோடு மக்கள் மனங்களில் அறிவொளி பரப்பும் தெய்வீகச் சுடராகவும் விளங்குகிறது.

சைவசமயப் பழக்க வழக்கங்கள் இளந்தலைமுறையினரிடையே அருகிவரும் இக்காலத்தில் குரு வழிபாட்டு முறையும் அருகிவருவதைக் காண்கிறோம். அதனைப் போற்றவேண்டும் என்ற நோக்கோடு இங்கு குருபூசைகள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இந்த ஆச்சிரமத்தினை வழிநடாத்துகின்ற சுவாமிகளின் குருவாக விளங்கிய மயில்வாகனம் சுவாமிகளின் குருபூசை வருடந்தோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இத்தினத்தையொட்டி பாடசாலை மாணவரிடையே பேச்சுப்போட்டி முதலானவை இடம்பெற்றுப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படுகின்றன. செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தோடும், சந்நிதியான் ஆச்சிரமத்தோடும் இணைந்துநின்று பல அறப்பணிகளைச் செய்த தவத்திரு முருகேசு சுவாமிகளின் குருபூசை தினமும் சிறப்பாக நடைபெறுவதோடு அவர் முன்னின்று நடாத்திவந்த அறுபத்துமூவர் குருபூசையும் வெள்ளிக்கிழமைதோறும் இச் சந்நிதியான் ஆச்சிரமத்தின் குருபூசை மண்டபத்தில் பக்திபூர்வமாக நடைபெற்று வருகிறது. அன்றைய தினம் அறுபத்து மூன்று அடியார்களோடு முருகனாக மேலும் ஒரு அடியாராக அறுபத்திநான்கு பேரை அங்கு இருத்தி தலைவாழை இலையில் அமுதுபடைத்து, தட்சணை வைத்து கற்பூரதீபம் காட்டி வழிபடப்படுவர். அப்போது அங்கு கூடியிருக்கும் அடியார்கள் சிவபுராணம் ஓதிக்கொண்டு இருப்பார்கள். பின்னர் அவர்களுக்குப் படைக்கப்பட்ட அமுதில் ஒவ்வொரு பிடியாகச்

சேர்த்து அதனைக் குழைத்து முருகனின் அருமருந்தாக ஏனையோருக்கு வழங்கப் படும். பின்னர் அடியார்கள் எல்லோரும் அமுதுண்டு இன்புறுவர். இவ்வாறு நடை பெறும் அறுபத்துமூவர் குருபூசையை நாம் எமது பெயரால் அல்லது பிள்ளைகளின் பெயரால் பிறந்தநாள் போன்ற தினங்களை முன்னிட்டும் அல்லது நேர்த்திக் கடனாக வும் செய்து இப் புனித பணிக்கு நாமும் எமது பங்களிப்பைச் செய்யலாம்.

இவ்வாறு எமது சைவமும், சமூக மும் தழைத்தோங்குவதற்கு முன்னின்று செயற்பட்டுவரும் சந்நிதியான் ஆச்சிர மத்தினால் மேற்கொள்ளப்படும் பணிகள் இன்னும் ஏராளம் உண்டு. தினமும் ஏதோ ஒருவகையில் அல்ல பல வழிகளில் சமயத்துக்கும் சமூகத்துக்கும் பணிபுரிந்து வரும் இந்த மடாலயத்தின் சிறப்புக்கு காரணமாக "எந்நிதியும் தருவான் செல்வச் சந்நிதியான்" என்ற அசையாத நம்பிக்கை யோடு செயற்பட்டுவரும் சுவாமிகளின் பணிகள் தொடர வாழ்த்துவதோடு நாம் அனைவரும் இப்பணிக்கு எம்மால் இயன்ற உதவிகளை வழங்கவேண்டியது எமது கடமையுமாகும்.

(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| ஷைராகரணி | கனடா | 5000. 00 |
| நேரு குடும்பம் (ஆவரங்கால்) | கொழும்பு | 5000. 00 |
| வடிவேலு சிவகணேசன் மூலம் (வட்டு. வடக்கு) | | |
| புவனசுந்தரம் மகாத்மாசோதி குடும்பம் | நோர்வே | 10000. 00 |
| T. சுதர்ஷன் | பருத்தித்துறை | 2000. 00 |
| சிவராசா துஷ்யந்தினி | சங்கிலியன்வீதி யாழ்ப்பாணம் | 2000. 00 |
| க. கணபதிப்பிள்ளை ஆசிரியர் இலக்கியவாசா | அல்வாய் | 1500. 00 |
| இராசதுரை சுதாகரன் | (கனடா) உடுப்பிட்டி | 10000. 00 |
| மு. சிவஞானம் | சங்கானை | 1000. 00 |
| Dr. தேவகாந்தன் | அமெரிக்கா | 10500. 00 |
| உதயகுமார் உருத்திரகுமார் பத்தமேனி | கனடா | 1000. 00 |
| தியாக சோமஸ்கந்தராசாக்குருக்கள் | தும்பளை | 1000. 00 |
| க. நவரெத்தினம் இளை. ஆசிரியர் | நெல்லியடி | 1000. 00 |
| கு. தியாகராஜசர்மா (நீர்வைமணிஐயர்) | நீர்வேலி 1மூடை அரிசி தேங்காய் | 2000. 00 |
| க. அமராவதி கட்டைப்பிராய் | கோப்பாய் | 500. 00 |
| V.R. வடிவேற்றசன் மூலம் (கொழும்பு) | | |
| A.V. முருகையா | அவுஸ்திரேலியா | 50000. 00 |
| சோமஸ்கந்தன் குடும்பம் | அவுஸ்திரேலியா | 20000. 00 |
| ஆனந்தஈஸ்வரன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| A.V. முருகையா மூலம் ஓர் அன்பர் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| சுந்தரலிங்கம் குடும்பம் கொக்குவில் மேற்கு | தாவடி | 2000. 00 |

(தொடரும்...

பிரார்த்தனை என்பது கடவுளிடம் ஏதாவது கேட்பதல்ல. அது ஆன்மாவின் ஏக்கமாகும்.

உ

(தொடர்ச்சி...

# ஔவையார் அருளிச்செய்த ஆத்திசூடி

## மூலமும் உரையும்

*28. அழகு அலாதன செயேல்*

ப-ரை. அழகு அலாதன - (நீ துன்பப்பட வந்த காலத்தும்) இழிவுள்ள செயல்களை, செயேல்- செய்யாதே.

அழகுடையன உயர்வுள்ள செயல்கள் ஆதலால், அழகலாதன இழிவுள்ள செயல்கள் என்பதாம்.

*29. இளமையிற் கல்.*

ப-ரை. இளமையில்- இளமைப் பிராயத்திலே, கல்- (நீ வித்தையைக்) கற்றுக்கொள்.

*30. அறனை மறவேல்.*

ப-ரை. அறனை- தருமத்தை, மறவேல்- (நீ ஒரு போதும்) மறவாதே.

*31. அனந்தல் ஆடேல்.*

ப-ரை. அனந்தல்- நித்திரையை, ஆடேல்- (நீ அதிகமாகச்) செய்யாதே.

*32. கடிவது மற.*

ப-ரை. கடிவது- (ஒருவரைச்) சினந்து பேசுவதை, மற- நீ மறந்துவிடு

*33. காப்பது விரதம்.*

ப-ரை. காப்பது- (உயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் அவைகளைக்) காப்பாற்றுவதே, விரதம்- விரதமாம்.

*34. கிழமைப் பட வாழ்*

ப-ரை. கிழமைப்பட- (உன்னிடத்தில் உள்ள பொருள் பிறருக்கும்) உரிமைப்படும்படி, வாழ்- நீ வாழு.

*35. கீழ்மை அகற்று*

ப-ரை. கீழ்மை- கீழ்மையாகிய குணத்தை, அகற்று- நீ நீக்கு.

*36. குணமது கைவிடேல்*

ப-ரை. குணமது- (மேலாகிய) குணத்தை, கைவிடேல்- நீ கைவிடாதே.

*37. கூடிப் பிரியேல்*

ப-ரை. கூடி- (நல்லவரோடு) சிநேகித்து, பிரியேல்- (நீ பின் அவரை விட்டு) நீங்காதே.

*38. கெடுப்பது ஒழி.*

ப-ரை. கெடுப்பது- பிறருக்குக் கேடு செய்வதை, ஒழி- நீ விட்டுவிடு.

*39. கேள்வி முயல்*

ப-ரை. கேள்வி- (கற்றவர் சொல்லும், நூற்பொருளைக் கேட்பதற்கு, முயல்- நீ முயற்சி செய்.

(தொடரும்...

# முதுமை

**வாரியார் சுவாமிகள்**

*முனையழிந்தது:*

முனை- போர். "முனைமுகத்து நில்லேல்"- ஆத்திசூடி.

இளம் செருக்கினாலும், இரத்த முறுக்கினாலும் ஊரில் எங்கே சண்டை நடந்தாலும் முன்னே போய் நின்று அதில் பங்கெடுத்துக்கொள்வது இளமையின் இயல்பு. சண்டைக்கு நான் என்று மார்தட்டி நிற்பர். வயோதிப பருவம் வந்தபடியால் சண்டை அழிந்துவிட்டது.

*மேட்டி குலைந்தது:*

மேட்டிமை- தலைமை.

இளமையில் நகராண்மைக் கழகம், பஞ்சாயத்துக் கழகம் முதலியவை கட்குத் தலைமை தாங்கி நிற்பர். இன்னும் பல கருமங்களுக்கு முதன்மை பெறுவர். இளமையின் வளமை தளர்ந்தவுடன் அத் தலைமைப் பதவிகள் தாமே அகன்றுவிடும். அதுமட்டுமன்றிக் குடும்பத்தின் தலைமையும் நீங்கும். கிழவரை ஒருவரும் பொருட்படுத்த மாட்டார்கள். முன்பெல்லாம் தன்னைக்கேட்டு தன் அனுமதி பெற்றவர்கள் இப்போது ஒன்றுக்கும் தன்னைக் கேட்பதில்லை. தன்னிடம் கலப்பதில்லை இவற்றை எண்ணி எண்ணி ஏங்குவர். இளமையில் தன்னை மதித்தவர்கள் முதுமை எய்திய இப்போது மதியாதிருந்தால் மனம் வருந்துவது இயல்புதானே.

*வயது சென்றது:*

வயது என்பது இங்கே வாலிபத்தைக் குறிக்கின்றது. "வால் வயதாகி", "வயதளவிலே வளர்ந்து என்ற திருப்புகழ் அடிகளைக் காண்க". வாலைப்பருவம் நீங்கியது.

*வாய்ப்பல்லுதிர்ந்தது:*

உடல் வளர்ச்சியின்றித் தளர்ச்சியுற்று, முத்துப்போல் வரிசையாக வாயில் அழகு செய்திருந்த பற்கள் ஒவ்வொன்றாக உதிர்ந்துகொண்டிருக்கும். பற்கள் கழன்றவுடன் சொற்களும் குழறத் தொடங்கும்.

*முதுகு வெஞ்சிலை காட்டி வளைந்து:*

நிமிர்ந்திருந்த முதுகு வில்லைப்போல நிலத்தைப் பார்த்து வளைந்துவிட்டது. "ஏ! கூற்றுவனே, தளர்ந்த பருவத்தில் என்னை உற்றாரும், மற்றாரும் வெறுக்கிறார்கள். இனி நான் மண்ணில் இருந்து என்ன பயன்? என் முதுகாகிய வில்லில் உன் பாசக்கயிற்றைக் கட்டி, திரிசூலத்தை அதில் தொடுத்து விடுத்து, என் உயிரைக் கொண்டுபோ" என்ற குறிப்பில் நமனுடைய பாசக்கயிற்றுக்கு வில்லைப்போலவே காட்டி வளைந்தது.

"ஏ! பூதேவி! நான் உன்னிலே பிறந்தேன்; உன்னிடத்தே தவழ்ந்தேன்;

இருந்தேன்; உன்மீது நடந்தேன்; படுத்தேன்; உன்னிடம் ஊறிய நீரைப் பருகினேன்; உன்னிடம் விளையும் உணவை உண்டேன்; அகந்தை கொண்டேன்; இளமை முறுக்கினால் உன்னைப் பார்த்து அடக்கமாக நடக்காது வானைநோக்கி நிமிர்ந்து நடந்தேன்; இப்போது உன்னிடம் சேரவேண்டிய காலம் நெருங்கிவிட்டது. அன்னையே! என்னை உன்னிடம் சேர்த்துக்கொள்'' என்று பூமிக்குக் காட்டி வளைந்தது.

***ப்ரபையான முகமிழந்தது:***

ப்பிரபை- ஒளி, உதிரப் பெருக்கினால் இளமையில் முகம் தளதளவென்று ஒளியுடன் திகழும். முதுமையில் உதிரம் வற்றி முகம் திரைத்து, கண்கள் குழிந்து, புருவம் மடிந்து, உதடு வாழைப்பூவின் மட்டைபோல் தொங்கி விகாரமடையும்.

***நோக்கு மிருண்டது:***

கண் சென்று அறியுங் கருவி. இளமையில் மிகுந்த தொலைவில் உள்ள பொருள்களையும் சென்று அறியும். அதன் ஓட்டந் தடைப்பட்டு அருகில் நின்ற பொருள்களையும் அறியமாட்டாது பார்வை இருண்டுவிடும்.

***இருமல் வந்தது:***

முதுமையில் வந்து ஒறுக்குந் துன்பங்கள் பலவற்றுள் ஒன்று இருமல். இரவில் வெண்கலம் போன்று கணீர் என்ற ஒலியுடன் கிழவர் இருமுகின்றபோது அது தமக்கு மட்டுமேயன்றிப் பிறருக்கும் இடர் விளைக்கும்.

***முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்***
***அக்கா லரைக்கண் டஞ்சாமுன் - விக்கி***
***இருமாமுன் மாகாணிக் கேகாமுன் நெஞ்சே***
***ஒருமாலின் கீழரையின் றோது***

*-காளமேகம்-*

***தூக்கமொழிந்தது:***

இருமலின் விளைவால் தூக்கம் ஒழிந்துவிட்டது. தலை சாய்த்துப் படுத்தால் இருமல் வரும். அதற்காக இருந்த வண்ணமாகவே இரவெல்லாம் காலம் கழிக்க நேரும். நல்ல தூக்கமின்மையால் எல்லா நோய்களும் வந்து தாமே குடிபுகும்.

***மொழிதளர்ந்தது நாக்கு விழுந்தது:***

பற்கள் கழன்றபடியால் செம்மையாக இலக்கணப் பிழையின்றிப் பேசிக்கொண்டிருந்த சொற்கள் குழைந்து விடும். மேலும் நாக்கு உள்ளே இழுத்துக் கொண்டது. அந்தோ! முதுமையில் ஒன்றின்பின் ஒன்றாக வரும் துன்பங்கள்தான் எத்தனை?

***அறிவே போய் நினைவயர்ந்தது:***

இளமையில் தெளிந்திருந்த அறிவு முதுமையில் கலங்கி மங்கிவிடும். அதனால் நினைவாற்றல் இன்றி இடர் விளையும். நினைவில்லாமையால் ஒரு விஷயத்தையே பலமுறை கேட்டு அருகிலிருப்போரை அல்லற்படுத்துவார்.

*நீட்டல் முடங்கலும்:*

கை கால்கள் தானே நீண்டு மடங்கும் ஆற்றலையிழந்தன. பிறரைக் கொண்டு நீட்டவும் மடக்கவும் வேண்டும். அதனால், தனக்கும் பிறருக்கும் வேதனை.

*அவசமும்:*

உணவு குறைவதனாலும், பிணிகள் நிறைவதனாலும் வலிமை குன்றி, முதுமையில் அடிக்கடி இளைப்பும் மூர்ச்சையும் உண்டாகும்.

*பல ஏக்கமும்:*

பற்பல விஷயங்களைக் குறித்து முதுமையில் ஏங்குவர். முன்னே தன்னை மதித்தவர்கள் இப்போது மதிப்பதில்லை. தன்னைக் கேட்டு ஒன்றும் செய்வதில்லை. கேட்டாலும் சொல்வதில்லை சொன்னாலும் காது கேட்பதில்லை. உணவு நசை நீங்கவில்லை. ஏதாவது உண்டுவிட்டால் செரிப்பதில்லை. இவைகளினால் முன் தான் இருந்த இருப்பையும், இப்போது தன்னைப்பற்றி வீட்டிலுள்ளார்க்கு ஏற்பட்டுள்ள வெறுப்பையும், முன்னிருந்த பெருமையையும் இப்போதுள்ள சிறுமையையும் எண்ணி எண்ணி ஏக்கமுண்டாகும்.

மூர்ச்சையும் ஏக்கமும் முற்பட்டன.

*நெறி மறந்தது:*

இளமையில் தான் கொண்டிருந்த ஆசார அனுட்டான நெறிகள் பலகாலமாகச் செய்துவராமையால் மறந்தே விட்டன.

*மூப்பு முதிர்ந்தது:*

முதுமை மிகமிக அதிகரித்துவிட்டது. நன்கு பழுத்துவிட்டது. இனி உதிரவேண்டியதுதானே!

*பாய்க்கிடை கண்டது:*

தளர்ச்சியின் மிகுதியால் பாயிலே கிடந்தவண்ணமாகத் துன்புறுங்காலம் வந்துவிட்டது.

"ஏ உடம்பே! நீ முதிர்ந்து உதிருங்கால், தாயும் சுற்றமும் பெண்டிரும் உன்னைக் கைநழுவ விடுவார்கள். அக்காலையில் நீயார்? நானார்? என்று வெறுத்துரைப்பார்கள். அப்போது நோய் மிகவும் அன்புடன் வந்து உன்னை அணைத்துக்கொண்டு உன்பாற் குடிபுகும். அப்போது நோயும் பாயும் நீயும் மிகுந்த பட்சத்துடன் நட்பாகுவீர். வேறு நட்பு உனக்கு ஏது?" என்று உடம்பை நோக்கி உரைக்கின்றார் திருவெண்காடர்.

*தாயாரும் சுற்றமும் பெண்டிருங் கைவிட்டுத் தாழ்ந்திடும் நாள்*
*நீயார் நானார் எனப்பகர் வார்அந்த நேரத்திலே*
*நோயாரும் வந்து குடிகொள்வ ரேகொண்ட நோயும் ஒரு*
*பாயாரும் நீயும்அல் லாற்பின்னை ஏதுநட் பாம்உடலே.*

*சலமலங்களின் நாற்ற மெழுந்தது:*

நோயும் பாயுமாயுள்ள அந்நாளில் மலமூத்திர நாற்றம் மிகுதியாக எழும். தனக்கும் பிறருக்கும் தாங்கமுடியாத வேதனை.

**சோதனைகள்தாம் ஒரு மனிதனை அவனுக்கு அறிமுகப்படுத்துகின்றன.**

*நிமிஷ மிங்கினியாச்சுதென் முன்பினி தருள்வாயே:*

"முருகா! மேலே கூறிய முதுமைத் துன்பங்கள் நிறைந்து, ஒருநிமிடத்தில் உயிர் பிரியும் முடிவான ஆபத்து வந்திருக்கின்றது. இந்த வேளையில் தேவரீர் திருவுளம் இரங்கி, தாயினும் சிறந்த தயாவுடன் அடியேனுக்கு முன்தோன்றி அருள் புரிவீர். இந்த வேளையில் கருணையே வடிவாகவுடைய கந்தப் பெருமானே! ஆபத்து வேளையில் அஞ்சேலென்று ஆட்கொள்வீர்" என்று அடிகள் மிகவும் உருக்கமாக வேலவனை வேண்டுகின்றார்.

---

(நித்திய அன்னப்பணி தொடர்ச்சி....

| | | |
|---|---|---|
| இராசேஸ்வரி குடும்பம் | கொக்குவில் மேற்கு தாவடி | 2000. 00 |
| ஐ. சண்முகதாஸ் | கனடா | 1000. 00 |
| தி. ரஞ்சன் மூலம் க. இராஜேஸ்வரன் | நாவலர்மடம் கரணவாய் | 10000. 00 |
| திரு லோகநாதன் மூலம் வேலுப்பிள்ளை | குலசேகரம் புத்தளம் | 10000. 00 |
| ஐயாமுத்து தர்மரெத்தினம் | மானாங்கனை வல்வெட்டித்துறை | 30000. 00 |
| கந்தஞானி குடும்பம் | பத்தமேனி | 1000. 00 |
| கந்தையா ராகினி போதராமடம் | துன்னாலை | 1000. 00 |
| வ. வல்லிபுரநாதன் புலவர் இல்லம் | உடுப்பிட்டி (கனடா) | 10000. 00 |
| க. சிவகுமாரன் G.S. | கட்டுடை மானிப்பாய் | 1000. 00 |
| வள்ளிப்பிள்ளை | கரவெட்டி | 2000. 00 |
| த. சிவகுமார் ஆசிரியர் | இணுவில் மேற்கு | 1மூடை அரிசி |
| தில்லைநாதன் ஆசிரியர் | ஆவரங்கால் | 5000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் குடும்பம் | பத்தமேனி அச்சுவேலி | 1000. 00 |
| சி. தணிகாசலம் பத்தமேனி | அச்சுவேலி | 1000. 00 |
| துஷிதா மனோகரன் | கரவெட்டி | 1000. 00 |
| சபாபதி சின்னத்துரை | துவாளிவீதி உடுப்பிட்டி 1மூடை அரிசி | 1500. 00 |
| ம. தர்ஷினி C.A. நிறுவனம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சி. தங்கராசா | ஆவரங்கால் | 1000. 00 |
| சு. இரங்குநாதன் | கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம் | 5000. 00 |
| அ. சிவகுமரன் | அன்ன சத்திர ஒழுங்கை கந்தர்மடம் | 3000. 00 |
| சுவாமிநாதன் குடும்பம் | வட்டு தெற்கு | 1000. 00 |
| திருமதி திருநாவுக்கரசு | அன்னசத்திர ஒழுங்கை கந்தர்மடம் | 500. 00 |
| கணேசபிள்ளை தவேந்திரன் | மருத்துவபீடம் யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திரு செ. செந்தில்குமரன் | நெல்லண்டை வீதி பருத்தித்துறை | 5000. 00 |
| மு. விசயரத்தினம் | காட்டுப்புலம் தொண்டைமானாறு | 1மூடை அரிசி |


(தொடரும்...

உ

(தொடர்ச்சி...

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



விஷேட அதிரடிப்படையினரும் பொலிஸ்காரரும் ஒன்றன்பின் ஒன்றாக பல வாகனங்களில் வீதியின் இருபக்கமும் வேட்டுக்களைத் தீர்த்தவாறு கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்திலிருந்து கரடிப் போக்குச் சந்தியை நோக்கி பயங்கரமான இரைச்சலுடன் வந்துகொண்டிருந்தனர். இதனை அவதானித்த லோகநாதன் மிகுந்த பயத்துடன் அருகிலிருந்த ஒரு அரிசி ஆலைக்குள் புகுந்து அங்கே பாதுகாப்பாக மறைந்துகொண்டார்கள்.

ஆசிரியையின் வீட்டில் சுடப்பட்ட தமது சகாவான சார்ஜன்டை மீட்பதற்கும், தம்மீது ஏற்படுத்தப்பட்ட தாக்குதல்களுக்கு பழிதீர்ப்பதற்குமாக சகல ஆயத்தங்களுடனும் வேட்டுக்களைத் தீர்த்தவாறு அங்கே வருகைதந்த அந்தப் படையினர் கரடிப் போக்குச்சந்தியில் தமது வாகனங்களை நிறுத்திவிட்டு "சார்ஜன்ட் மாத்தையா" "சார்ஜன்ட் மாத்தையா" என அழைத்தவாறு லோகநாதனுடைய கடைக்கு அருகாமையிலுள்ள அந்த ஆசிரியையின் வீட்டிற்குள் சென்றனர். அங்கே இறந்துகிடந்த சார்ஜன்டின் உடலைத்தான் அவர்கள் காண முடிந்தது. இறந்துகிடந்த சார்ஜன்டின் உடலைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்த படையினர் அப்பகுதி எங்கும் கண்மூடித்தனமாக வேட்டுக்களைத் தீர்த்தனர். அந்த வேட்டுக்களிடையே அங்கே பலருடைய அவலக்குரல்களும் ஒலித்துக்கொண்டிருந்தன.

அப்பொழுது நேரம் மு.ப.11.00 மணி ஆகிவிட்டது. அவர்கள் மூட்டிய தீயினாலும், தீர்த்த வேட்டுக்களினாலும் பெரும்பாலும் ஓலைகளினால் வேயப்பட்டிருந்த அந்தக் கடைகளும் வீடுகளும் பற்றி எரியத்தொடங்கியது. கரடிப்போக்குச் சந்தியில் ஏற்கனவே அந்தப் புலிப்போராளி தப்பிஓடியபொழுது கைவிட்டுச் சென்ற

மோட்டார் சைக்கிளையும் அதிரடிப் படையினர் தீயிட்டுக் கொழுத்தினர். இவ்வாறு 3ஆம் வாய்க்கால் ரோட்டிலும் கரடிப் போக்குச் சந்தியிலும் மக்களுக்கும் உடமைகளுக்கும் பேரனர்த்தங்களை ஏற்படுத்தி தமது பழியைத் தீர்த்தவாறு அந்த விஷேட அதிரடிப்படையினர் இறந்த சார்ஜன்டின் உடலுடன் திரும்பிச்சென்று கொண்டிருந்தனர்.

இந்த அவலங்கள் எல்லாம் நடைபெற்று ஓய்ந்துவிட்டதை அரிசி ஆலைக்குள் மறைந்திருந்தவாறு திரு லோகநாதன் அவர்கள் அவதானித்துக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது லோகநாதன் அவர்கள் அந்த அரிசி ஆலையிலிருந்து வெளியே வந்தார்கள். தமது கடை அமைந்திருந்த இடத்தை நோக்கி படபடக்கின்ற நெஞ்சத்துடன் மெதுமெதுவாக நடந்துசெல்ல முற்பட்டார்கள்.

அங்கே ஏற்பட்டிருக்கின்ற அழிவுகளையும் எரிந்து கொண்டிருக்கின்ற உடமைகளையும் கண்ணுற்ற லோகநாதன் அவர்கள் என்றுமில்லாத அளவு கலக்கமும் துன்பமும் அடைந்தார்கள். தான் கஷ்டப்பட்டு நம்பிக்கையுடன் செயற்படுத்திக்கொண்டிருக்கும் தனது கடைக்கு இவ்வாறான அழிவுகள் ஏற்பட்டிருக்கக்கூடாதென சந்நிதி முருகனிடம் வேண்டுதல் செய்தார்கள். இவ்வாறான வேண்டுதலுடன் திரு லோகநாதன் தனது கடை அமைந்திருந்த பகுதியை நோக்கி மெது மெதுவாக நடந்து கொண்டிருந்தார்கள்.

என்ன விபரீதம் அங்கே கண்ட அந்தக்காட்சியினால் அவரது நெஞ்சே வெடித்துவிடும் போலிருந்தது. தூரத்திலிருந்து பார்க்கின்றபொழுதே அவரது கடை முகப்பு அவருக்கு நன்கு தெரிந்து கொண்டிருந்தது. ஆனால் அவரது கடை முகப்போ எரிந்த நிலையில் அல்லவா காட்சி தந்து கொண்டிருந்தது.

இவ்வாறு எரிந்து கிடக்கின்ற தனது கடையை நோக்கி மிகுந்த துன்பத்துடன் அதை அண்மித்துக் கொண்டிருந்தபொழுது அங்கே அவரது கடைக்கு முன்பாக அவர் கண்ட அந்தக் காட்சி அவரது உடல் முழுவதையும் அப்படியே உறையச் செய்துவிட்டது.

ஆம்! அவருடைய கடைக்கு முன்பாக இறந்து கிடக்கின்ற ஒருவரது அவலக் காட்சியைத்தான் அவர் அங்கே காண நேர்ந்தது. அதுமட்டுமல்ல அது அவருடைய....

(தொடரும்...

**கருணை புரிவான்**

வானம் பொழிய வேண்டும்
வறுமைகள் ஒழிய வேண்டும்
தானம் பெருக வேண்டும்
தருமங்கள் சிறக்க வேண்டும்
ஞானச்சுடர் சந்நிதிவேலன்
அனுக்கிரகம் புரிந்திட வேண்டும்
கானம் இசைபாட மகிழ்ந்து
கருணை புரிவான் வர்ணபகவான்

*திரு இராம ஜெயபாலன் அவர்கள்*

உலக ஆசை நீங்குமளவு ஈசுவர பக்தி அதிகரிக்கும்.

தமிழகத் திருக்கோயில் வரிசை: உ

# திருவொற்றியூர்

வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்

"சுந்தரா! சொன்னதை மறந்து விடாதே"- இறைவன்

"இருக்கட்டும். நான் சொன்னதை மறக்காமல் தாங்கள் மகிழ மரத்தடிக்குப் போய்விடுங்கள்"- சுந்தரர்

மறுநாட்காலை சீக்கிரமே கோயிலுக்கு வந்துவிட்ட சுந்தரருக்கு தன் தோழியர் புடைசூழ சங்கிலியார் வருவதைப் பார்த்ததும் ஏகப்பட்ட மகிழ்ச்சி.

"சங்கிலி! இறைவன் சந்நிதானம் போகலாமா? நான் சத்தியம் செய்து தருகிறேன்" - சுந்தரர்

"ஐயா, மனிதர்கள் உறவுக்குச் சுவாமியை வம்புக்கு இழுப்பானேன். அந்த மகிழ மரத்தடிக்கு வந்து சத்தியம் செய்தாற்போதும்" - தோழிகளில் ஒருத்தி.

ஏதோ புரிந்தும் புரியாமலும் இருந்தது சுந்தரருக்கு. தியாகேசர் தன்னை வகையாக மாட்டிவிட்டார் என்பது மட்டும் தெளிவாகப் புரிந்தது. இருந்தும் சங்கிலியார் மீதிருந்த தீராத காதலினால் மகிழ மரத்தடிக்குச் சென்று சத்தியம் செய்கிறார்.

"திருவொற்றியூர் எல்லை தாண்டி நான் எங்கும் போக மாட்டேன். இது இந்த தியாகேசர் மீது சத்தியம்" - சுந்தரர்.

மேலே உள்ள உரையாடலும் நிகழ்வும், தொடர்ந்து சான்றோர் முன்னிலையில், சுந்தரர்- சங்கிலி திருமணமும் நடைபெற்ற இடம்தான் திருவொற்றியூர் திருக்கோயில்.

சென்னையில் வடக்கு எல்லையில் 13 கி.மீ தூரத்தில் கடற்கரை ஓர நெடுஞ்சாலையில் நகரத்தின் சந்தடி ஏதுமற்ற அமைதியான சூழலில் திருவொற்றியூர் காணப்படுகிறது. கலிய நாயனார் அவதரித்துத் திருவிளக்குத் தொண்டு செய்ததும், ஐயடிகள் காடவர் கோன், முசுகுந்தச் சக்கரவர்த்தி ஆகியோர் வழிபட்டதும், முற்றும் துறந்த பட்டினத்தார் முத்திப்பேறு அடைந்ததும், சுந்தரர் தவிர அப்பரும் ஞானசம்பந்தரும் தேவாரம் பாடியருளியதும், ஆதிசங்கரர்- வள்ளலார் போன்றவர்களின் வாழ்வோடு நேரடியாக இயைந்ததும், இன்னமும்பல சிறப்புக்களினாலும் பெருமைபெற்றது திருவொற்றியூர்த் திருத்தலம்.

ஐந்து நிலைகள் **கொண்ட** கிழக்கு நோக்கிய இராஜகோபுரத்துடனான மிகப்பெரிய கோயில். கோபுரவாசல் தாண்டியதும் உள்ளே கொடித்தம்பமும் நந்தியும் கண்ணிற்படுகின்றன. அழகான சிற்ப வேலைப்பாடமைந்த **தூண்கள்** கொண்ட பதினாறுகால் **மண்டபம்**, பதினாறுகால் மண்டபம் **தாண்டி பக்கவாட்டில்** உள்ளே போனால் ஒற்றியூர் **மூலவரின்** அற்புத தரிசனம். **இறைவன்: ஆதிபுரீஸ்**வரர், புற்றிடங்கொண்டார், **தியாகேசர், பட**ம்பக்கநாதர் எனப்பல பெயர்கள். **இறைவி:** திரிபுரசுந்தரி, வடிவுடையம்மை எனப் பல

பெயர்கள். மூலவர் ஒற்றியூர் ஈசன் சுயம்பு லிங்கத் திருமேனி. சிவலிங்கமும் ஆவுடையார் பகுதியும் சதுரவடிவில் அமைந்துள்ளதால், சதுரவடிவ கவசம் சுவாமிக்குச் சாத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகைமாத பௌர்ணமி தினத்தில் இக்கவசம் அகற்றப்பட்டு, புனுகு- சவ்வாது- சாம்பிராணி தைலம் கொண்டு அபிஷேகம் செய்கிறார்கள். மூன்று நாட்களின் பின் மீண்டும் கவசம் சாத்தப்பட்டு வருடம் முழுவதும் ஈசன் கவசத்துடனேயே காட்சி தருவதால், ஏனைய வேளைகளில் நடைபெறும் அபிஷேகங்கள் அனைத்தும் ஆவுடையார் பகுதிக்கே நடைபெறுகின்றன.

மூலவருக்கு எதிரில் உள்ள சிறிய நந்திக்கு அருகே, வெளியேயுள்ள கொடிமரம், நந்தி ஆகியவை தெரியும் படியாக 36 துவாரங்கள் கொண்ட சாளரம் காணப்படுகிறது. 36 துவாரங்களும் 36 தத்துவங்களைக் குறிப்பதாக சொல்கிறார்கள்.

மூலவருக்கும் 36 துவாரங்கள் கொண்ட சாளரத்துக்கும் இடையே உள்ள மண்டபம் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் உடனான தூண்கள் கொண்டதாக காணப்படுகிறது. சிற்பங்களின் சிறப்புக்கள் சிற்பியின் கைவண்ணத்தைப் பறைசாற்றி நிற்கின்றன.

மூலவருக்கு வலதுபக்கமாக அம்பாள் சந்நிதி தனிக்கோயிலாகக் காணப்படுகிறது. நின்ற கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் அம்பிகை வடிவுடையம்மை அருள்பாலிக்கிறாள். வடிவுடையம்மைமீது வள்ளலார் பாடிய "வடிவுடைமாணிக்கமாலை"ப் பாடல்களும், பிற திருமுறைப் பாடல்களும் அம்பாள் சந்நிதிச் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அம்பாள் சந்நிதியை வலம்வரும் வேளையில் கலியநாயனாருக்குத் தனிச்சந்நிதியும், அறுபத்துமூவர் சந்நிதியும் தென்படுகின்றன. உட்சுற்றிலும் வெளிச்சுற்றிலும் நிறைந்து காணப்படுகின்ற தனித் தனிச் சந்நிதிகளில் அனைத்துப் பரிவார மூர்த்தங்களும் உள்ளனர்.

அம்பாள் சந்நிதியின் பிற்புறம் உள்ள சிறிய பாதையினூடாகச் சென்றால் 27 நட்சத்திர இலிங்கங்கள் காணப்படுகின்றன. 27 நட்சத்திரங்களும் நிரந்தரமாக அங்கேயே தங்கி ஒற்றையூர் ஈசனை வழிபடுவதாக ஐதீகம். இலிங்கங்கள் அனைத்தும் வெவ்வேறு அளவுகளிற் காணப்பட்டாலும் அவிட்ட நட்சத்திர இலிங்கம் கண்ணைக் கவரும் அழகுடன் பெரிதாக உள்ளது.

வெளிப்பிரகாரத்தில் தெற்கு வீதியில் குளத்துக்கு அருகே சிறிய மண்டபமும், மகிழ மரமும் காணப்படுகின்றன. இதுதான் சுந்தரர் சத்தியம் செய்த இடம். சுந்தரர்- சங்கிலியாருக்காக இறைவன் வந்தமர்ந்த புனிதம் பெற்ற மகிழ மரமல்லவா இது. உடம்பு புல்லரிக்கக் கண்களில் ஒற்றிக்கொள்கிறோம். ஆதி மகிழமரம் வயது முதிர்ந்துவிட்ட காரணத்தால் அருகே இன்னுமொரு மகிழமரத்தை நாட்டி வளர்த்துள்ளார்கள். அருகே இருக்கும் அந்தச் சிறிய மண்டபத்திலேதான் சுந்தரர்- சங்கிலியார் திருமணம் நடைபெற்றது. இந்நாளிலும் அந்த மண்டபத்தில் தங்கள் திருமணத்தை நடாத்திக் கொள்வதைப் பெரும்பேறாக பலரும் கருதுவதால் திருமணங்கள் நடைபெறுகின்றன.

கோபுர வாசலுக்கு எதிரே உள்ள சாலையின் கிழக்குப் (கடற்கரை)ப் பக்க

**பகைமையைப் பகைமையால் தணிக்க முடியாது, அன்பின் மூலமே அதைத் தணிக்கலாம்.**

மாக மிகச் சொற்ப தூரத்தில் பட்டினத்தார் சமாதி காணப்படுகிறது. ஓட்டினால் வேயப்பட்ட சிறிய ஒரு மண்டபமாக இருந்த போதும் உள்ளே உள்ள சிவலிங் கமும் அதன் அலங்காரமும் கண்களைக் கட்டிப்போடுகின்றன. வாயிற் சுவரில் பட்டினத்தார் சமாதியான இறுதிநேரச் சம்பவம் (மீனவச் சிறுவர்களும் தானும் கரப்பு கொண்டு விளையாடிய (கோழிக் குஞ்சு அடைக்கும் கூடை)) வரலாறு ஓவியமாகத் தத்ரூபமாக வரையப்பட் டுள்ளது. ஆடி மாதத்து உத்தராட நட்சத் திரத்தில் வரும் பட்டினத்தார் குருபூசைத் தினம் இங்கு மிக விசேடமாகக் கொண் டாடப்படுகிறது.

பி.கு: பரபரப்பு மிகுந்த சென்னை மாநகரில் பொழுதுபோக்க வரும் நம்மவர்கள் பலரும்கூட, அண்மையில் இருக்கின்ற அற்புதத் திருக்கோயிலாம் திருவொற்றியூரையும், அருகிருக்கும் பட்டினத்தார் கோயிலையும் கண்டுகொள்ளாமல் இருப்பது பெரும் வேதனையான விடயம்.

வாவியெல்லாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்க ளெல்லாங் கணநாதர் - பூவுலகில்
ஈது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதுந் திருவொற்றி யூர்.

- பட்டினத்தார்-

## பசு~ ஸ்ரீராமர்~ அர்ஜுனன்

கோளாறு பதிகம் 9ஆவது பாட்டில் “பசு வேறும் எங்கள் பரமன்” என்று சிவபெருமானை அடியார் குறிப்பிட்டிருக்கிறார். சிவபெருமானின் வாகனம் “எருது” என்றல்லவா சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம்?

“பசு” என்ற சொல்லுக்கு ‘கட்டுப்பட்டது’ என்பது பொருள் ‘பச்’ என்ற தாதுவிலிருந்து பசு என்ற சொல் வந்தது. ஆகவே கட்டுப்பட்ட எருதுவுக்கும் பசு என்ற பெயர் உண்டு. எருதுவும் கட்டுப்பட்டதுதானே?

ஆனால் உலகப் பெருவழக்கில் பசு என்பது பெண் இனத்தைக் குறிக்கிறது. ஆராய்ச்சிப்படி பசு என்பது மாட்டின் பொதுப்பெயராகும். ராகவன் என்ற சொல் ரகு வம்சத்தில் வந்தவன் என்ற பொருளைத் தரும். தசரதனும் ரகு வம்சத்தில் வந்தவன். லட்சுமணனும் ரகுவம்சத்தில் வந்தவன், பரதனும் ரகுவம்சத்தில் வந்தவன், சத்ருக்கனும் ரகுவம்சத்தில் வந்தவன் ஆகவே எல்லோரும் ராகவர்கள்தான். ஆனால் உலகப் பெருவழக்கில் ராமனை மட்டும் ராகவன் என்று கருதுகிறார்கள்.

பார்த்தன் என்ற சொல்லுக்குப் பொருள் பிரதையின் மகன் என்பதாகும். தர்மனும் பிரதையின் மகன்தான். பீமனும் பிரதையின் மகன்தான், அர்ஜுனனும் பிரதையின் மகன்தான் ஆகவே தர்மனும் பார்த்தன், பீமனும் பார்த்தன், அர்ஜுனனும் பார்த்தன். ஆனால் உலகப் பெருவழக்கில் அர்ஜுனனையே பார்த்தன் என்று குறிப்பிடுகிறார்கள்.

உ

# ஐப்பசிமாத வாராந்த நிகழ்வுகள்

03-10-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**விடயம்:-** "மேன்மைகொள் சைவநீதி"

**வழங்குபவர்:-** திரு க. கைலைநாதன் ஆசிரியர் அவர்கள்

(யா/ சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை)

---

10-10-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "சமய குரவர்கள் காட்டிய இந்துசமய விழுமியங்கள்"

**வழங்குபவர்:-** திரு கணேசபிள்ளை முருகமூர்த்தி (ஆசிரியர்)

(யா/ தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்)

---

17-10-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

பாடசாலை மாணவர்கள் நிகழ்வு

(யா/ வல்வை சிதம்பரக் கல்லூரி மாணவர்கள்)

---

24-10-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**சொற்பொழிவு:-** "பெரியபுராணம்" (தொடர்)

**வழங்குபவர்:-** அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

---

31-10-2008 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 130ஆவது மாத வெளியீடு

## ஐப்பசி – 2008

**வெளியீட்டுரை:-** திரு சி. பத்மநாதன் J.P அவர்கள்

**மதிப்பீட்டுரை:-** கலாநிதி காரை எஸ்.பி. அருளானந்தன் அவர்கள்

(ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி யாழ்ப்பாணம்.)

பதிவு இல. Q.D/60/NEWS/2008

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த நிகழ்வுகள் 2008

## ஜனவரி

01.01.2008 மார்கழி 16 செவ்வாய்
மங்களப்புத்தாண்டு ஆரம்பம்
15.01.2008தை 1 செவ்வாய்
தைப்பொங்கள்
18.01.2008தை 4 வெள்ளி
கார்த்திகை விரதம் விசேட உற்சவம்
22.01.2008தை 8 செவ்வாய்
தைப்பூசம் விசேட உற்சவம் பகல்

## பெப்ரவரி

14.02.2008மாசி 2 வியாழன்
கார்த்திகை உற்சவம்
21.02.2008 மாசி 9 வியாழன்
மாசி மகம்

## மார்ச்

06.03.2008மாசி 23 வியாழன்
மகாசிவராத்திரி விரதம்
விசேட உற்சவம் மாலை 7 மணி
12.03.2008மாசி 29 புதன்
கார்த்திகை உற்சவம்
18.03.2008பங்குனி 5 செவ்வாய்
வருடாந்த சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
21.03.2008பங்குனி 8 வெள்ளி
பங்குனி உத்தரம்
வைரவப் பெருமாள் கும்பாபிஷேக தினம்

## ஏப்ரல்

07.04.2008பங்குனி 25 திங்கள்
ஆலய கும்பாபிஷேக தினம்
சகஸ்ர மகாசங்காபிஷேகம்
காலை 8 மணி சங்குப்பூஜை
பகல் 10 மணி சங்காபிஷேகம்
பகல் 11 மணி சண்முக அர்ச்சனை
பகல் 12 மணி விசேட உற்சவம்
09.04.2008பங்குனி 27 புதன்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
13.04.2008சித்திரை 1 ஞாயிறு
தமிழ் இந்துப் புத்தாண்டு (சர்வதாரி)
மாலை 6.30 விசேட உற்சவம்
22.04.2008 சித்திரை 8 ஞாயிறு
சித்திரா பூரணை

## மே

06.05.2008 சித்திரை 24 செவ்வாய்
பகல் 10 மணி கார்த்திகை உற்சவம்
19.05.2008 வைகாசி 6 திங்கள்
வைகாசி விசாகம், விசேஷட உற்சவம்

## ஜூன்

02.06.2008 வைகாசி 20 திங்கள்
கார்த்திகை உற்சவம்
30.06.2008 ஆனி 16 திங்கள்
கார்த்திகை உற்சவம்

## ஜூலை

03.07.2008 ஆனி 19 வியாழன்
கதிர்காமம் கொடி, பயணப்பூஜை
07.07.2008 ஆனி 23 திங்கள்
தீர்த்தமெடுப்பு
09.07.2008 ஆனி 25 புதன்
ஆனி உத்தரம் விசேட உற்சவம்
13.07.2008 ஆனி 29 ஞாயிறு
சின்ன ஆண்டியப்பர் பூஜை
14.07.2008 ஆனி 30 திங்கள்
வருடாந்த குளிர்ச்சிப் பொங்கல்
27.07.2008 ஆடி 12 ஞாயிறு
கார்த்திகை உற்சவம்

## ஆகஸ்ட்

01.08.2008 ஆடி 17 வெள்ளி
ஆடி அமாவாசை
23.08.2008 ஆவணி 7 சனி
கார்த்திகை உற்சவம்
30.08.2008 ஆடி 28 திங்கள்
ஆலய மகோற்சவ ஆரம்பம்
இரவு 2.15 கொடியேற்றம்

## செப்டெம்பர்

03.09.2008 ஆவணி 18 புதன்
காலைத்திருவிழா ஆரம்பம்
08.09.2008 ஆவணி 23 திங்கள்
பூங்காவனம்
09.09.2008 ஆவணி 24 செவ்வாய்
கைலாய வாகனம்
13.09.2008 ஆவணி 28 சனி
சப்பறம்
14.09.2008 ஆவணி 29 ஞாயிறு
தேர்
15.09.2008 ஆவணி 30 திங்கள்
காலை - தீர்த்தம்
மாலை - மௌனத் திருவிழா
22.09.2008 புரட்டாதி 6 திங்கள்
பிராயச்சித்த அபிஷேகம்
30.09.2008 புரட்டாதி 19 செவ்வாய்
நவராத்திரி விரதாரம்பம்

## அக்டோபர்

08.10.2008 புரட்டாதி 22 புதன்
சரஸ்வதி பூஜை
09.10.2008 புரட்டாதி 23 வியாழன்
விஜயதசமி
17.10.2008 ஐப்பசி 1 வெள்ளி
கார்த்திகை உற்சவம்
27.10.2008 ஐப்பசி 11 திங்கள்
தீபாவளி தினம்
29.10.2008 ஐப்பசி 13 புதன்
கந்தஷஷ்டி விரதாரம்பம்

## நவம்பர்

04.11.2008 ஐப்பசி 19 செவ்வாய்
சூரசங்ஹாரம்
05.11.2008 ஐப்பசி 20 புதன்
பாரணை, தெய்வானை அம்மன்
திருக்கல்யாணம்
13.11.2008 ஐப்பசி 28 வியாழன்
கார்த்திகை உற்சவம்

## டிசம்பர்

11.12.2008 கார்த்திகை 26 வியாழன்
திருக்கார்த்திகை உற்சவம்
குமாராலய தீபம்
14.12.2008 கார்த்திகை 29 ஞாயிறு
ஆண்டியப்பர் பூஜை

**சுபமங்களம்**
**நன்றி**